கூட்டுறவு நூல்

இது

T. S. சுப்பிரமணியன் B. A., B. L., L. T.

K. S. ஸ்ரீநிவாசன் B. A.

ஆகிய

இவர்களால் இயற்றப்பட்டது.

மதராஸ் கோவாபரேடிவ் சங்கங்களின்

ரிஜிஸ்தராரான

ஆனரபில் திவான்பகதூர்

L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை M. A., B. L., LL. B.

அவர்கள் எழுதிய ஆங்கிலமுகவுரையுடன்

சென்னை சௌத் இந்தியன் பிரஸ்ஸில்
அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு.

1913.

விலை அணா 6.] [Price Annas 6.

PRINTED AT

THE SOUTH INDIAN PRESS,

18, LINGHI CHETTY STREET, G. T., MADRAS.

INTRODUCTION.

(For the English Edition.)

OF the innumerable enquiries to which it is part of the daily routine of a Registrar of Co-operative Societies to devise replies, none is more frequent than that for "books on the subject." What the enquirer generally wants in such cases is a book dealing with Indian conditions and accessible to all. India has developed so many features of its own in the working of co-operative societies that it is impossible not to extend a hearty welcome to a little book dealing with the subject in plain language and expounding practical problems with their practical solution. The present publication satisfies these requirements and I am glad to learn that it is to be shortly translated into the vernacular. The most heart-rending thing about preaching the gospel of co-operation is that after a meeting has been addressed during the hour or two hours that one is able to devote to the purpose; one is not able to refer to some book that

will serve to remind the hearers of the good tidings they have listened to, or supply the necessary nourishment during the first period of growth of an infant society. And there are thousands of villages which one is not able to visit at all, and to which one feels regretfully that one is unable to send a deputy in print, *Parve, nec invideo, sine me, liber, ibis ad omnes.*" I hope the present little messenger, when translated will serve to acquaint every one that cares to read it, with the maxims, the history and the practice of co-operation. It will be evident to all who have read the general literature on the subject that the authors, while aiming at simplicity of language and treatment, have not failed to lay under contribution all the best books that have been written thereon in European languages. Since the passing of India Act II of 1912, the meaning of co-operation in this country has been greatly extended, and the immense boons conferred by co-operative credit societies will naturally lead enquiring minds to think of other fields of activity. The authors have, therefore, done well to refer to such possibilities; we can, broadly speaking only deal at present with "possibilities," outside the region of credit. With precise ideas as to how to get about to work, there is no doubt that the new Act will have a better chance than if agriculturists and artisans who had barely learnt the rudiments of co-operative credit, were left to work out their salvation, unaided, by

means of productive and distributive societies, coined from their own brain. I would advise every one who reads this little book, to proceed, as soon as he can, to make direct acquaintance with the working of any co-operative society in his neighbourhood, and he will be assisted, in his further study, by the well-selected appendices to the book.

22-10-1912. L. D. SWAMIKANNU.

அட்டவணை.

கூட்டுறவு நூல்.

1-ஆவது அத்தியாயம்.

பீடிகை.

தனலாபத்தை உத்தேசித்து கூடிச்செய்யும் ஏற்பாடுதான் கூட்டுறவு அல்லது கோவாபரேஷன் என்று சொல்லப்படுவது. பாட்டுக்கேட்க சிலர் கூடினால் அது கூட்டுத்தொழிலல்ல; ஏனென்றால் அவர்கள் கூடுவதில் தனலாபமடையவேண்டுமென்னும் கருத்துக்கிடையாது. பத்துக் குடித்தனக்காரர்கள் கூடித் தங்கள் மாடுகளுக்காக ஒரு மூட்டை பருத்திக்கொட்டை வரவழைத்து தமக்குள் பாகஞ்செய்து கொண்டால், ஒவ்வொருவரும் தனித்தனியே வாங்குவதைக்காட்டிலும் விலை சரசமாய் முடியும்: இவர்கள் செய்தது கூட்டுத்தொழில் என்று சொல்லலாம். அல்லது சில தச்சர்கள் ஆளுக்குக்கொஞ்சமாய் பணம் போட்டு ஒரு மரம் அறுக்கும் யந்திரம் வாங்கிப் பொது உபயோகத்துக்கு வைத்துக்கொண்டால், அறுப்புக்கூலி சுவல்பமாய் முடியும். சிரமமே இல்லாமலும் மரங்களை அறுத்துக் கொள்ளலாம். அவர்களுக்கு இந்த ஏற்பாட்டினால் அதிகலாபம் கிடைக்கும். இத்துடன் தாங்கள் செய்யும் சாமான்களை எல்லாம் ஒன்றாய் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யும்படியாயும் ஏற்பாடு செய்துவிட்டால், லாபம் இன்னும் அதிகமாகும். இந்தமாதிரி தொழில் செய்வதில் ஒவ்வொருவனும் மற்றவனுடைய லாப

த்தையே தேடவேண்டியதாகிறது. ஆகையால் ஒரே இடத்தில் ஒரேதொழில் செய்துகொண்டு இருப்பவர்கள் வழக்கமாய் சண்டைபோட்டுக் கொள்ளுவதுபோல் இதில் நேரிடாது. இது கூட்டுத்தொழில் என்பதில் தடையில்லை. இதில் இருக்கும் விசேஷம் என்னவென்றால் ஒவ்வொருவனும் அயலான் லாபத்தை விருத்தி பண்ணுவதினாலேயே தன்னுடைய லாபத்தை விருத்தி செய்து கொள்ளுகிறான். கூட்டுத்தொழில் முறைப்படி எந்த எத்தனம் செய்தாலும் கிடைக்கும் லாபத்தை எத்தனத்தில் சேர்ந்தவர்கள் எல்லோரும் நியாயமாய் பாகித்துக் கொள்ளுகிறார்கள். இப்படிக்கு லாபத்தைப் பிரித்துக் கொள்ளுவதில் கஷ்டமே இருக்காது. பொதுவாய் எல்லாரும் நியாயமென்று நினைக்கும் வழியே அனுசரிக்கப் படுகிறது. சாதாரணமாய் கூட்டுத்தொழிலில் மூன்றுவகையுண்டு. அவைகளாவன—(1) சரக்குகள் வாங்கிப் பிரிவினை செய்தல், (2) சரக்குகளை உண்டாக்குதல், (3) நாணயம். ஆகினும் மேற்சொன்னவைகளை பலமாதிரியாகச் சேர்த்து வேறுவகைகளும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

(1) பிரிவினைச் சங்கங்கள் சாமான்களை மொத்தமாய் வாங்கி சங்கத்தார்களுக்குச் சில்லரையாக விற்கின்றன. இதனால் இரண்டு விதமாய் ஸாதகம் உண்டாகிறது—1. சாமான் விலை நயப்படுகிறது. 2. சங்கத்தார்களுக்கு கலப்பில்லாமல் நல்ல சரக்குகள் கிடைக்கிறது. இங்கிலாந்தில் "கோவாபரேஷன்" என்றால் இவ்வகைச் சங்கந்தான் மனதுக்கு உடனே ஞாபகம் வரும். அங்கே 1906-ம் வருஷத்தில் இச்சங்கங்கள் 1,400 இருந்தன. அதின் மெம்பர்கள் 23 லக்ஷம் அவைகளின் மூலதனம் 50 கோடிரூபாய். இதிலிருந்து இங்கிலீஷ்காரர்கள் எவ்வளவு கூர்மை புத்தியுடன் உபயோகமான காரியங்களைச் செய்கிறார்கள் என்று விளக்குகிறது. இந்தியாவுக்

காக திருவல்லிக்கேணிப் பிரிவினைச் சங்கமொன்றுதான் பிரபலமாய் வேலைசெய்கிறது.

(2) சேர்ந்து வேலைசெய்தாவது அல்லது கூட்டாய் முதல் போட்டாவது சரக்குகளை உற்பத்தி செய்யும் சங்கம் உற்பத்திச் சங்கமென்று சொல்லப்படுகிறது. தச்சர்கள் கூடி பொதுவில் மரமறுக்க யந்திரம் வாங்குவதைப்பற்றி ஏற்கனவே சொன்ன உதாரணத்தில், முதல் போட்டவர்களெல்லாம் கூட்டுத்தொழிலாளிகள்.

இதுவரையில் இந்த தேசத்தில் வட்டிலாபமடைய கடன் வாங்க ஏற்பட்டிருக்கும் நாணயச்சங்கங்கள்தான் பிரபலித்திருக்கின்றன.

2-ஆவது அத்தியாயம்.

இந்தியாவில் கூட்டுறவு எப்படி ஏற்பட்டது.

இந்தியாவுக்கு ஐக்கியநாணயச்சங்கங்கள் அத்தியாவசியமானவை. இந்தியர்களனைவரும் வியவசாயிகளே: வியவசாயிகளுக்குக் கடன் வாங்காமல் மாளாது. உலகெங்கும் அப்படியே. அவர்கள் முதலெல்லாம் நிலத்திலும், வியவசாய ஸாதனத்திலும் முடங்கியிருக்கிறது. வியவசாயிகள் கடனாளிகளாவதற்கு க்காரணம் வியவசாயச்செலவுமட்டுமல்ல; வேறுகாரணங்களுமுண்டு—இல்லாமை, அக்ஞானம், அஜாக்கிரதை, குடும்ப பாகவிதிகள், காலவிபரீதங்கள், அநியாயவட்டி, இவைகள்தான். காரணம் எதுவாயிருந்தாலும்சரி, அவர்கள் கடனாளிக

ளாவது நிச்சயம். உலகெங்கும் இது ஸகஜமானால் இந்தியா வில் கேட்கவே வேண்டாம்; ஏனென்றால் கொஞ்சகாலமாய் குடித்தனம்செய்வது கஷ்டமாகிக்கொண்டுவருகிறது. உழவு மாடு, விதை, எரு, வியவசாயக்கருவிகள், முதலானவைகளின் விலை ஏறிப்போய்விட்டது. முன் காலங்களில் சுவல்பவிலைக் கோ அல்லது இனாமாகவோ கிடைக்கக்கூடிய கருவிகள் இப் போது அதிக விலை கொடுத்தால்தான் கிடைக்கிறது. முன்பு 30 ரூபாய் விலையாயிருந்த மாட்டுக்கு இப்போது விலை 100 ரூபாய். எருவோ, பத்து வருஷத்திற்கு முன்பு ஒரு வண்டி முனிஸிபாலிட்டிக் குப்பை இரண்டு தம்படிக்குக்கூடக் கேட் பாரற்றிருந்தது; இப்போது எட்டணாவுக்குக்கூட அது கிடை ப்பதில்லை. ஆள்கூலி மிதமில்லாமல் அதிகரித்து இருக்கிறது. சில வருஷங்களுக்கு முன்பு நாளுக்கு இரண்டணாக்கூட சம் பளம் அகப்படாமல் அலைந்த கூலியாள்கள் நாளைக்கு எட் டணா அல்லது பத்தணாவுக்குக்கூட கிடைப்பது கஷ்டமாய்ப் போய்விட்டது. இதனாலெல்லாம் கிரிஷிச் செலவு ஒன்றுக்கு மூன்றாகி விட்டது என்பது விளங்கும்.

இத்துடன் யோகக்ஷேமச் செலவுகளும் ஜாஸ்தியாகி விட்ட தென்பதையும் கவனிக்கும்போது வியவசாயிகள் கடன் வாங்குவதா ஆச்சரியம். இன்னும் ஜாஸ்தியாய் வாங் காததுதான் ஆச்சரியம் !

கிரிஷிகள் கடன் வாங்காமல் தீராது; ஆகையால் கடன் படாமலே யிருக்கும் வழியைத் தேடுவது சாத்தியமில்லை. நாம் தேடவேண்டிய வழி பின்புதுக்கம் வராமல் எப்படிக் கடன் வாங்கலாம் என்பதற்குத்தான்.

இப்போது போலவே முன்னாள்களிலும் சிறிய குடித் தனக்காரர்கள் கடன்வாங்க வேண்டித்தான் இருந்தது.

ஆனால் சண்டையாவது கலகமாவது ஏற்பட்டாலொழிய பூஸ்திதியை இழக்க இடம் இல்லை. கேவலம் சாப்பாட்டுக்கு வேண்டுவதைத்தவிர மிகுதியைக் கடன்காரன் கைப்பற்றிக் கொண்டிருந்திருக்கலாம். ஆகிலும் அவன் தன் நிலத்தை மீட்டுக் கொண்டிருந்தான். ராஜநீதி செல்லாத காலங்களில் அக்கிரமவட்டி வாங்குபவன் தப்பிப் பிழைக்க முடியாது. ஆகையால் அக்கிரமவட்டி வாங்குவது வழக்கமில்லை. *இப்பொழுதோ வென்றால் ஆங்கிலேய அரசாக்ஷியில் ஏற்பட்டிருக்கும் கச்சேரியில் எல்லோருக்கும் ஓரேவிதமாக சட்டப்படி நியாயம் கிடைக்கிறது: கடுமை வட்டி வாங்குபவனும் கடனாளியின் நிலத்தை ஒப்பந்தப்படி பிடுங்கிக்கொள்ளலாம். கிரிஷிகர்கள் அடிக்கடி கடன் பட்டமையால் நிலத்தை யிழக்க இடமுண்டாயிற்று.

சாவகார்கள் என்று சொல்லப்படும் கொடுக்கல் வாங்கல் செய்பவர்கள் அனுஷ்டானங்கள் சில வற்றை கவனிப்போம். அவர்கள் 100-ரூபாய்க்கு சீட்டு எழுதி வாங்கிக்கொண்டால் 90-ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஆனால் கடன் வாங்குபவன் மாதம் 10-ரூபாய் வீதம் 10-தவணையாக 100-ரூபாயும் திருப்பிக் கொடுக்கவேண்டும். கணக்குப் பார்த்தால் இது 100-த்துக்கு $1\frac{1}{3}$-வட்டியாகிறது. தவிரவும் குறிப்பிட்ட தேதியில் தவணை கொடுக்கத் தவறினால் நாளொன்றுக்கு ரூபாய்க்கு காலணா வீதம் வட்டி வாங்குகிறார்கள். சாதாரணமாய் குறிப்பிட்ட தேதியில் பணங்கொடுக்க முடியாமலிருப்பதால் 100-த்துக்கு 4-அல்லது 5-வீதம் வட்டி கொடுக்கவேண்டி வருகிறது.

---

* லவட் பிரேசர் என்பவர் புத்தகத்திலிருந்து எடுத்தது.

மலேயாளத்திலும் குடகிலும் மாசூலின் அடமானத்தின் பேரில் கடன் கொடுக்கும் ஏற்பாடு ஒன்று உண்டு. மாசூல் அருவடைக்காலத்துக்குச் சுமார் 4-மாதத்துக்கு முன்பு குடித்தனக் காரர்களுக்கு கையில் பணம் காசு இல்லாமல் வறண்டு போகிறது. இதுதான் சாவுகாருக்குச் சமயம்; தானிய வட்டிக்குக் கடன் கொடுக்கிறான்; ஆனால் தானியத்துக்கு 3-பட்டி* சுமார் ரூ. 7-8-0 விலை யிருக்கும்போது, ரூ. 4-வீதம் விலை போட்டுக் கொள்ளுகிறான். இது 20-வட்டிக்கு மேல் கணக்காகிறது. தவிரவும் அந்த வருஷத்து மாசூல் கடனுக்கு ஈடாகாமல் போனால் பாக்கியை அடுத்தவருஷத்து மாசூலிலிருந்து ஈடுபண்ணிக் கொள்ளுவான்: ஆனால் அப்போது 3-பட்டிக்கு விலை ரூ. 3-தான் வைத்துக் கொள்ளுவான். கடனாளிக்குத் திண்டாட்டம் சாவகாருக்குக் கொண்டாட்டமென்று இதனால் வெளியாகிறது. இந்த தேசத்தில் குடித்தனக்காரன் சாவ கார் கையில் சிக்கி கொள்ளுவது வெகு சுளு. நிலத்தைப் பயிர் செய்வதில் சமர்த்தனாக விருக்கலாம்— ஆனால் லேவா தேவி விஷயங்களில் அவனுக்கு ஒன்றும் தெரியாது. பணம் வேண்டுமானால் மாசூலை அடமானம் வைக்கிறான். அது வும் காணாமல் போனால் நிலம், வீடுவாசலெல்லாவற்றை யும் ஈடு வைக்கிறான். சாவகாரிக்கு எந்த விதத்திலும் லாபம் தான். மாசூலை வாங்குவதோ அழிந்த விலைக்கு, விற்பதோ அக்கிரம விலைக்கு. இப்படி விற்பது எவர்களிடத்தில் வாங்கி னானோ அவர்களிடத்திலேயே தான். சில வேளையில் வருஷத் துக்கு ரூபாய்க்கு ரூபாய் வட்டிவாங்குவான். அடமான நிலம் போதுமானதாக இருந்தால் ஜப்திசெய்து கட்டிக்கொண்டு விடுவான். இப்படிக்கு பிராசுதாராக இருந்தவன் குத்தகைக் காரன் ஸ்திதிக்கு வந்து விடுகிறான்.

* பட்டி யென்பது ஓர் மலையாளம் அளவு.

குடித்தனக் காரர்கள் ஸ்திதி எவ்வளவு கேவலமாகி விட்டதென்பது 1877-ம் ஆண்டு பஞ்சத்தில் அவர்கள் பட்ட அவஸ்தையிலிருந்து தெரிந்தது. தாங்களினி ஒன்றும் செய்யாமலிருக்கக் கூடாதென்று ஸர்க்காருக்கு விளங்கியது. 1883-ம் வருஷத்திலும், 1884-ம் வருஷத்திலும் இரண்டு சட்டங்கள் கிருஷிகர்களுக்குக் கடன் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டன. ஆனால் எதிர்பார்த்தபடி இதனால் சௌகரியங்கள் உண்டாகவில்லை. விவசாயிகளுக்கு வேண்டிய காரியங்களுக்கெல்லாம் கடன் கிடைக்கவுமில்லை. கொடுத்த கடனை சரியாக உபயோகப்படுத்தினர்களா என்பதை கவனிக்கவும் கூடவில்லை.

இதற்கு கொஞ்சகாலம் முன்பு புனாவில் ஸர். வில்லியம் வெட்டர்பர்ன் துரையவர்கள் ஒரு விவசாயபாங்கி ஏற்படுத்த பிரயத்தனம் செய்தார். ஆனால் ஸர்க்கார் உதவி அதிகமாய் வேண்டியிருந்தபடியால் இந்த ஏற்பாடு அங்கீகரிக்கப் படவில்லை. பஞ்சாபில் குடித்தனக்காரரின் ஸ்திதி அதிகேவலமாயிருந்தது. அவ்விடத்திலும் இது விஷயமாய்ச் செய்யப் பட்ட ஏற்பாடுகள் பயன்படவில்லை. நம்முடைய கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படிக்கு ஸர். நிக்கல்ஸன் துரையவர்கள் நில விவசாய பாங்குகளைப்பற்றி 1892-ம் ஆண்டு விசாரணைசெய்ய ஆரம்பித்து 1895-ம் ஆண்டு இரண்டு புஸ்தகங்கள் எழுதி முடித்தார். இதற்குமேல் ஒன்றும் கொஞ்ச காலத்துக்கு நடக்கவில்லை. 1900-ம் வருஷத்தில் லார்டு கர்ஸன் துரையவர்கள் பஞ்சாப்தேசத்தின் கிருஷிகரின் க்ஷேமத்துக்காக நிலங்களை வேறு மனிதர்களுக்கு விற்பதைத்தடுக்க ஒரு சட்டத்தை ஏற்படுத்தினர். இதுவே விபரீதமாக முடிந்தது. ஏனென்றால், நிலம் விற்க முடியாததால் நிலத்தை அடமானம் வைக்

முடியவில்லை. ஆதலால் வட்டி ஜாஸ்தியாகி விட்டது. இந்த சந்தர்ப்பத்தில் முக்கியமாய் நிக்கல்ஸன் துரை, டியூபர்னே துரை, இவர்களுடைய ஒத்தாசையைக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்களை உண்டுபண்ண சட்டம் செய்யலானார்.

1904-ம் வருஷ ஐக்கியநாணயச் சங்கச்சட்டம் ஏற்பட்டது * இந்தச் சட்டம் இந்தியாவின் நிலைமைக்கு ஏற்ற சங்கங்களை உண்டுபண்ண இடங்கொடுத்தது. குடிகளுக்கு இலகுவாய் குறைந்த வட்டிக்குப் பணம் கிடைப்பதுமட்டும் போதாது; பணத்தை சரியாக உபயோகிக்கும்படி செய்ய நிபந்தனைகளும் வேண்டும். இலகுவாய் பணம் கிடைப்பது என்பது மட்டும் இருந்தால் கடன்தான் மேலுக்குமேல் அதிகரிக்கும். செட்டாயிருப்பவர்களுக்கேதான் கடன்கொடுக்கலாம்; ஏனென்றால் கடன் வாங்கும் பணத்தை அவர்கள்தான் சரியாய் உபயோகம் செய்வார்கள். தவிரவும் குடிகளுக்குக் காரியம் செய்தலில் பொறுப்பும் பணைதைரியமும் வரவேண்டும். ஐக்ய நாணயச்சங்கங்களில் பின்வரும் சாதகங்கள் ஏற்படுகின்றன:—

(1) சிறு தொகைகளானாலும், பெருந்தொகைகளானாலும், சங்கங்களில் கடன் இலகுவாகக் கிடைக்கும்.

(2) கடனைத் துளித்துளியாகச் சங்கங்களுக்குத் திருப்பிக் கொடுக்கலாம்.

(3) சரி என்று அங்கீகரிக்கப்பட்ட சில காரியங்களுக்குத்தான் கடன் கிடைக்கும்.

(4) எந்தக் காரியத்துக்காகக் கடன் கொடுக்கப்படுகிறதோ அந்தக் காரியத்துக்குத்தான் உபயோகப்படுத்தப்படவேண்டுமென்று கட்டாயம் உண்டு.

---

* இந்தியா X-வது ஆக்ட்.

(5) யோக்கியர்களாயிருந்தால்தான் சங்கங்களில் சேர்க்கப்படுவார்கள்; ஆகையால் கடன்களைப்பற்றி பயத்துக்கிடமில்லை.

(6) கடன் நிபந்தனைகள் நியாயமாகவே யிருக்கும்.

(7) மெம்பர்கள் ஒருவர்மற்றொருவரைப்பார்த்து வெகுட்டாக இருந்து, பயன்படும் மார்க்கங்களில் பணத்தைச் செலவிடுகிறார்கள்.

(8) சங்க நிபந்தனைகளை மெம்பர்களே செய்துகொள்ளுகிறபடியால், அவைகள் சங்கங்களுக்குத் தக்கபடி ஒத்திருக்கின்றன.

முதலில் கொஞ்சம் ஜயம் வந்தால் அதுவே மேல் மேல் விருத்திக்குக் காரணமாயிருக்கும். இந்தியாவில் ஐக்கிய நாணயச்சங்கங்கள் விருத்தியடைந்த சீக்கிரத்தைப்பார்த்தால், இத்தேசத்து ஜனங்களுக்கு அவைகள் ஒத்திருக்கிறதென்பதற்கு வேறு ருஜு வேண்டாம். 1912-ம் வருஷத்தில், சென்னை ராஜதானியில் மட்டும் சுமார் 1000 சங்கங்களிருக்கின்றன. அவைகளின் மெம்பர்கள் 66,000; மூலதனம் ரூ. 75,00,000; சங்கங்களுக்குக் கிடைத்தலாபம் ரூ. 1.66.000; க்ஷேமநிதி ரூ. 3,00,000.

இந்தியாவில் சங்கங்கள் இவ்வளவு வளர்ந்ததற்குக் காரணம் சுலபமாய் அறியலாம். கனம் ஜஸ்டிஸ் சந்தாய்யர் அவர்கள் சொல்லியவாறு, இந்தியாவின் கிராமங்களே வெகுகாலமாகக் கூட்டுறவுச் சங்கங்களாக விருந்து வருகின்றன. நிலங்கள் கிராமத்தவர்களுக்குப் பொது; அவர்கள் ஷேர்க்காரர் நிலைக்கு கூட்டுஜவாப் பாகிறார்கள். கிராமக்காரியங்கள் கிரா

மத்துச் சபையாரால் நடத்தப்படுகின்றன. பிரிட்டிஷ் அரசாட்சியில் ஒவ்வொருவருக்கும் தான் வேறு என்னும் எண்ணம் உண்டானாலும் இன்னும் கிராமக்கட்டுவிடவில்லை. முன்னொரு சமயத்தில் கிராமக்கூட்டங்களுக்கு வாஸ்தவத்தில் செல்வாக்கிருந்தது. கிராமக்காரியங்கள் அநேகமாய் பொதுவில் நடந்தன. இப்போதுகூட பாலக்காட்டில் தமிழ்ப் பிராம்மண கிராமங்களில் பொதுவாக சமயல் பாத்திரங்கள் இருக்கின்றன. அவைகளை யார் வேண்டுமானாலும் விசேஷ தினங்களில் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். தனித்தனியாகச் செய்ய முடியாத சடங்குகள் கிராமப்பொதுவாய் நடத்தப்படுகின்றன. இந்தியாவில் சிறிய குடித்தனக்காரர்கள் மிகுதியானதால், ஐக்கியநாணயச் சங்கங்கள் இத்தேசத்துக்கு உபகாரமாயிருக்கும். கிராமங்களில் ஒவ்வொருவருக்கும் மற்றவருடையஸ்திதியும் யோக்யதையும் தெரியுமாதலால், எவ்வளவு கடன்பயமில்லாமல் கொடுக்கலாமென்று சுலபமாய் அறியலாம். இந்தியாவில் சங்கங்கள் பலித்ததற்கு முக்கியக்காரணம் ஸர்க்கார் உதவிதான். நாணயச்சங்கங்கள் தவிர, பிரிவினைச் சங்கங்களையும் உற்பத்திச் சங்கங்களையும் ஏற்படுத்த தக்க தருணம் வந்துவிட்டதென்று ஸர்க்காருக்குத் தோன்றி, 1912-ம் வருஷத்தில் ஒரு புது ஆக்ட்டு ஏற்படுத்தினார்கள். இந்த ஆக்டுப்படி, லாபகரமான காரியங்களை விருத்திசெய்ய கூட்டுறவு முறைப்பிரகாரம் சங்கங்களை உண்டுபண்ண இடமுண்டு.

3-ஆவது அத்தியாயம்.

ஐக்கியநாணயச் சங்கங்கள்.

ஐக்கியநாணயச் சங்கங்களின் முக்கியக் கருத்துக்களாவன: இலகுவான வட்டிக்கு சங்கத்தார்களுக்குப் பணம் சேகரித்துக் கொடுத்தல்; பணத்தை சுலபமாய்த் திருப்பிக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தல்; அவர்களுக்குள் சிக்கனத்தை விருத்தி செய்தல். சிக்கனம், சுயஉதவி, பரஸ்பர சகாயம், இவைகள் இச்சங்கங்களின் ஆதாரக் கொள்கைகள். ஒரே இடத்திலுள்ள சிலர்கள் சேர்ந்து ஒரு சங்கம் அமைக்கப்படுகிறது. தங்களாலானமட்டும் ஒரு சிறுமுதல் சேர்த்துக்கொண்டு, சிக்கனமாயும் ஒழுங்காயும் தொழில் நடத்துவதால் அவர்கள் கூட்டு ஜவாப்பின்பேரில் வெளியிலிருந்து பணம் சுலபமாய்க் கிடைக்கிறது. தர்மஸ்திகளை ஏற்படுத்திக்கொண்டு தங்களுக்குள்ளே கடன் கொடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் அப்படி கடன்கொடுப்பது ஒப்புக்கொள்ளப்பட்ட காரியங்களுக்குத்தான்.

கூட்டுறவு பாங்கிகளின் பிரயோசனம் இதுமாத்திரமே அல்ல. சாதாரண பாங்கிகள், தகுந்த ஈடுகொடுக்க முடியாதவர்களுக்குக் கடன் கொடுப்பதில்லை; அப்படிப்பட்டவர்களுக்குக்கூட, யோக்கியர்களாக இருந்து, உபகாரமான காரியங்களுக்குக் கடன்கேட்டால், ஐக்கியநாணயச் சங்கங்கள் கடன் கொடுக்கும். சங்கத்தினர்களுக்கு சிக்கனமும் விருத்தியாகி காலக்கிரமத்தில் கடன்வாங்க அவசியமே இல்லாமல் போ

கிறது. அவர்களுக்கு புத்தி கூர்மையாகிறது; குணம் திருந்து கிறது; மனதும்கட்டுக் கொள்ளுகிறது. சுபஉதவியும் நிர்வாக சக்தியும் ஜாஸ்தியாகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சாதாரண பாங்கிகளுக்கும் பொதுவான குணங்கள் அநேகமுண்டு. ஒருவனிடத்தில் போய் கடன் வாங்குவதிலுள்ள மானபங்கம் இவ்விரண்டிலும் இல்லை. இருவகை பாங்கிகளுடனும் கொடுக்கல் வாங்கல் செய்வதில் பணகஷ்டத்துக்கும் மோஸதுஇல்லை, மனஸ்தாபத்துக்கும் இடமில்லை. கடனாளிகளிடத்தில் மீரும் பணம் சுவல்பமோ மிகுதியோ எப்படியிருந்தாலும் சரி, பாங்கிகள் பெற்றுக்கொண்டு கடனுக்கு ஈடு செய்து கொள்ளும். தவிரவும் அவைகள் எல்லோருக்கும்தெரிந்தமுறைப்படி தொழில் நடத்துகின்றன. அவைகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்பவர்கள் தங்கள் வாஸ்தவ நிலைமையை நினைத்தபோது சுலபமாய் நிர்ணயித்துக் கொள்ளலாம். அவைகளுடைய லேவாதேவிக் கணக்கை வேண்டும்போது பார்த்துப் பரிசோதனை செய்ய இடமிருப்பதால் கணக்கில் சூதுசெய்வது எளிதல்ல. லேவா தேவி செய்கிறவர்களிடத்தில் கடன்படுகிறவர்கள் வரவாக் கடனில் முழுகுகிறார்கள்; பாங்கிகளில் மீட்டுக்கொள்ள வழியிருக்கிறது. இது அநுபோகத்தில் தெரிந்த விஷயம்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்ற பாங்கிகளுக்கும் மூலாதாரமான கொள்கைகளில் வித்தியாசமுண்டு:—இரண்டாவது சொல்லிய வகை பாங்கிகளுக்கு, மெம்பர்களுக்குக் கூடியவரையில் மிகுதியான லாபத்தை சம்பாதித்துக் கொடுப்பதுதான் முக்கியக் கருத்து. தாங்கள் செய்யும் லேவாதேவி எவ்வளவு, தாங்களடையும் லாபமெவ்வளவு, என்பதைமட்டும் பார்த்து அவைகள்செய்த வேலை மதிக்கப்படுகிறது;

ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்தின் முக்கியக்கருத்தோ என்னவென்றால், மெம்பர்களுடைய குணத்தைச் சீர் திருத்துவதும், அவர்களைக் கடன்வாங்காத நிலைமைக்குக் கொண்டுவருவதும் தான்.

வியாதியாயிருக்கும்போது மட்டும் மருந்து சாப்பிட்டு வியாதி நின்றவுடன் மருந்தை எப்படி நிறுத்தவேண்டுமோ, அப்படியே தேவையிருக்கும்போது மாத்திரம் கடன் வைத்துக்கொள்ளலாமே தவிர தேவையில்லாதபோது கடன் வைத்துக்கொள்ளக்கூடாது. கனம் திவான்பகதூர் ஸ்வாமிக்கண்ணு பிள்ளை அவர்கள் சொல்லியவாறு சாதாரண பாங்கிகளில் சந்தாதார்களுக்கும் கடன் வாங்குபவர்களுக்கும் ஒருவருக்கு சௌகரியமாயிருப்பது மற்றொருவருக்கு அசௌகரியமாயிருப்பதுபோல் கூட்டு நாணயச் சங்கங்களிலில்லை.

கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றபாங்கிகளுக்கும் ஒன்றுக்கொன்று போட்டியில்லையென்பதை கவனிக்கவேண்டும். இவைகள் மற்ற பாங்கிகள் செய்யும் வேலைக்கு அநுசரணையாகவே இருக்கின்றன. இவைகள் சாதாரண ஜனங்களுக்குக் கூட பாங்கிகளின் சௌகரியங்களைத் தருகின்றன. சாதாரண பாங்கிகளுக்குச் சிறியதொகைகள் லேவாதேவி செய்வது கட்டிவராது. அப்படிப்பட்ட சிறிய வியாபாரங்களுக் கேற்றது கூட்டுறவுச் சங்கங்கள்தான். இச்சங்கங்களில் சேர்ந்தவர்களுக்குத் தகுந்த அடமானம் வைக்கமுடியாததால் ஒரு சாதாரண பாங்கியில் அவர்களுக்குக் கடன் கிடைக்காது. ஆனால் நாணயத்தையும் யோக்கியதையையும் நம்பி பாங்கி கடன் கொடாவிட்டாலும்; ஐக்கிய நாணயச் சங்கங்கள் அப்படி கொடுக்கும். ஒன்று அல்லது இரண்டு நபர் ஜாமீன் இருந்தால் போதும்.

ஐக்கியநாணயச் சங்கங்களின் பிரதானமான கொள்கைகளைப்பற்றிச் சொல்லுவோம். கடன் கொடுப்பவனும் வாங்குபவனும் சமீபமாய் இருக்கவேண்டும். கடன் வாங்குபவன் தூரத்தில் இருந்தால் கொடுக்கிறவன் அஞ்சுவான். கடன் கொடுக்கிறவன் யோஜிக்கிறது என்னவென்றால் இவனுக்குக் கடனைத்திருப்பி வாங்கக்கூடுமா என்பதுதான். கடன் வாங்குகிறவன் யோக்கியனாய் இருக்கவேண்டும். கடன் வாங்குகிறவர்களுக்குக் கடன் வாங்குவதில் சிரமம் இருக்கக்கூடாது. கேட்டவுடன் தடங்கலில்லாமல் தர்ம வட்டியாய் பணம் வேண்டும். திருப்பிக் கொடுப்பதில் அசௌகரியமான ஷரத்துக்கள் இருக்கக்கூடாது. வாங்கும்பணத்தை உபயோகமான வழியில் செலவுசெய்யும்படி தூண்டுதல் இருக்கவேண்டும். கொடுக்கல் வாங்கலுக்கு சௌகரியங்களிருப்பது மட்டும் போதாது. சங்கத்தில் சேர்ந்திருப்பவர்களுக்குச் சங்கம் முன்னுக்கு வரவேண்டுமென்னும் பொறுப்பு இருக்கவேண்டும். சங்கத்தை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர மனப்பூர்த்தியாய் உழைப்பவர்கள் இருக்கவேண்டும். மிஸ்டர் வுல்ப் (Mr. wolff) என்பவர் பின்வருமாறு சொல்லுகிறார்—"சங்கத்தை ஸ்தாபிக்கவும், பின்பு நடத்தவும், மனப்பூர்த்தியாய் உழைப்பவர் வேண்டும். இல்லாவிட்டால் சங்கம் நெடுநாள் நிலைபெறாது. சங்கத்தில் ஊக்கமில்லாதவர்களுக்குச் சங்கம் ஏற்படுத்திக் கொடுப்பது முடியாது." மெம்பர்களைச் சேர்ப்பதில் நிர்ப்பந்தம் உதவாது; வீண் ஆடம்பரமும் உதவாது. மெம்பராய்ச்சேருவது பெருமை என்று அதை ஆவலோடு விரும்புகிறவர்களைத் தான் சேர்த்துக்கொள்ளவேண்டும். சங்கம் சம்மதப்பட்ட வரையில் மேலானவர் கீழானவர் என்னும் வித்தியாசம் இருக்கக்கூடாது. சங்கத்தி

ளுள்ளவர்களெல்லாரும் சமம்தான். பிரபுக்கள் சேருவதில் யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை. அவர்கள்சேருவதால் உபயோகம் இருக்கலாம்; ஆனால் சங்கத்தில் மற்றவர்களைப்போலவேதான் அவர்களை பாவிக்க வேண்டும். அவர்கள் பிரபுத்துவத்திற்காகத் தனியாய் அதிகாரம் ஒன்றும் கிடையாது. கணக்குப் பரிசோதனை செய்யவும் மேல்விசாரணை செய்யவும் பூர்த்தியாக இடம் இருக்கவேண்டும். ஒழுங்கான வேலையும் ஜாக்கிரதையான கவனமும் சங்கத்தில் அத்தியாவசியமாய் இருக்கின்றன. சங்கத்தின் வியவகாரங்களெல்லாம் வெளிப்படையாய் இருக்கவேண்டும். சங்கத்தின் லேவாதேவிவேலை வெளி உதவியை அபேக்ஷிக்காமல் கூடியமட்டும் மெம்பர்கள் கட்டியிருக்கும் பணத்தைக்கொண்டே நடத்தவேண்டும்.

ஐக்கிய நாணயச்சங்கங்கள் பலவகைகளாகப் பிரிக்கப்படும். ஐரோப்பாவில் ஷூல்ஸ்டெலிட்சு ஏற்பாடு, லூஸாட்டி ஏற்பாடு, ரெய்பெய்ஸன் ஏற்பாடென்று மூன்று முக்கியமானவைகளுண்டு. இவைகளெல்லாவற்றிற்கும் பரஸ்பரவாதகம் தான் ஆதாரம்; முக்கியமாய்க் கவனிக்கப்படுவது மெம்பர்களுடைய யோக்கியதையே யொழிய பாங்கில் போட்டிருக்கும் முதலல்ல.

சங்கங்களை பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களென்றும் பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்களென்றும் இரண்டு வகைகளாயும் பிரிப்பதுண்டு. இன்னும் மற்றவகைகளாவன: (1) மூலதனமுள்ள சங்கங்கள்; மூலதனமில்லாத சங்கங்கள்; (2) நகரச்சங்கங்கள்; கிராமச்சங்கங்கள்.

இந்தியா 1904-ம் வருஷத்திய ஆக்டுப்பிரகாரம் சங்கங்கள் நகரச்சங்கங்களென்றும், கிராமச்சங்கங்களென்றும் பிரிக்

கப்பட்டன. ஆயினும் அநுபோகத்தில் "சென்ட்ரல்" சங்கங்களென்றும் இணைச்சங்கங்களென்றும் (unions) இரண்டுவகைச் சங்கங்கள் உண்டாயின.

4-ஆவது அத்தியாயம்.

மூவகை கூட்டுறவு பாங்கிகள்.

ஷூல்ஸ் டேலிட்சு சங்கங்கள்.

ஷூல்ஸ்டெலிட்சு என்பவர் ஜர்மனிதேசத்தில் டெலிட்சு என்னும் சிறிய ஊரில் இருந்தவர். ஒரு ராஜாங்க சேவகம் செய்தவர். அவர் மிகவும் ஏழை. 1850-ம் வருஷத்தில பரிக்ஷார்த்தமாய் ஒரு சிறியசங்கம் ஏற்படுத்தினார். இந்தச்சங்கம் ஏற்படுத்துவதில் ஜனங்களை நல்லமார்க்கத்தில் கொண்டுவருவதுதான் அவர் கருத்து. அந்த எண்ணம் சித்திபெற்றது. பணம் தேவையாய் உள்ளவர்களுக்கு கடன்சம்பாதித்துக்கொடுப்பது மட்டும் அவர் கருத்தல்ல. கண்டபடி கடன் கொடுக்கக்கூடாதென்று அவர் நினைத்தார். பாத்திரமறிந்து கடன் கொடுக்க வேண்டுமென்பதும், பிரயோஜனமுள்ள காரியங்களுக்கு மட்டுமே கடன் கொடுக்கவேண்டுமென்பதும், அவர் சித்தாந்தம். 1849-ம் வருஷத்தில் மெம்பர்களுக்கு வியாதியால் பீடிக்கப்பட்டபோது உதவிசெய்ய ஒரு சங்கம் ஏற்படுத்தினார். அதே வருஷத்தில் சக்கிலியர்களைச் சேர்த்து ஒருசங்கம் ஏற்படுத்தினார். 1850-ம் வருஷத்தில் 10 கைத்தொழிலாளிகள் சேர்ந்து ஒரு நாணயச் சங்கத்தை முதல் முதல் ஏற்படுத்தினார். இம்

மாதிரிச் சங்கங்கள் இப்போது உலகெங்கும் நாகரீகமுள்ள இடங்களிலெல்லாம ஏற்பட்டிருக்கின்றன.

வியவகார எல்லை.—இம்மாதிரிச் சங்கங்களில் வியவகார எல்லையைப்பற்றி ஒருவித நிர்ப்பந்தமும் கிடையாது. ஆயினும் ஒரு எல்லை ஏற்படுத்திக் கொள்ளுவது வழக்கம்.

முறைகள்.—இச்சங்கம் பொறுப்புவரையறுக்கப்படாத முறையை அனுஷ்டிக்கிறது. முதலானது பங்குகளாய்ப் பிரிக்கப்பட்டு பல தவணைகளாய் வசூலிக்கப் படுகிறது. ஜர்மனியில் பங்கொன்றுக்கு 5–பவுன் முதல் 30–பவுன் வரையில் கொடுக்கவேண்டி வரும்; இங்கிலாந்தில் கால் பவுன் முதல் 10–பவுன் வரையில்தான் கொடுக்கவேண்டும். மூலதனத்தையும் மெம்பர்களுடைய கூட்டு ஜவாப்பையும் நம்பி இச் சங்கங்களுக்குக் கடன் கொடுக்க ஜனங்கள் பிரியப்படுகிறார்கள். மூலதனமும், க்ஷேமநிதியும், கட்டப்படும் பணமும் (டிபாசிட்டுகளும்), வாங்கும் கடன்களும் சேர்ந்து சங்கத்தின் முதலாய் உபயோகப் படுகின்றன. குறுகிய தவணைகளுக்குத் தான் கடன் கொடுக்கப்படும்; வழக்கமாய் மூன்று மாதத்துக்கு மேல் போகிறதில்லை. லாபத்தில் ஒரு பாகத்தை க்ஷேமநிதியில் சேர்த்துவிட்டு, ஒரு பாகத்தை மெம்பர்களுக்கும் சிப்பந்திகளுக்கும் கொடுத்துவிட்டு, மிகுதியைப்பங்குத் தொகையுடன் சேர்த்து விடுகிறார்கள். வேண்டும்போது சங்கத்தை விட்டு மெம்பர்கள் விலகலாம்; ஆனால் சேர்க்கப் படுவது மட்டும் ஆராய்ந்து ஆலோசனையின் மேல்தான்.

சங்கத்துக்குக் குறைந்தது 7–மெம்பர்கள் வேண்டும்.

நிர்வாகம்.—சங்கங்கள், அவைகளுக்கு வெளியிலுள்ள எவர் அதிகாரத்துக்கும் உட்பட்டவையல்ல. மகாசபைதான் சங்கத்துக்கு மேலதிகாரி. இந்த மகாசபை சந்தாதாரர்களெல்

வரும் அடங்கியது. ஒவ்வொருவருக்கும் ஒரு வோட்டு (vote) தான் உண்டு. இந்த மகாசபை அக்கிராசனாதிபதி, பொக்கிஷதார், கணக்குப் பரிசோதகர் என்ற அதிகாரிகளடங்கிய ஒரு நிர்வாகசபையோரைத் தெரிந் தெடுக்கிறது. இவர்களுக்கு மாதச் சம்பளமாவது, லாபத்தில் ஒரு விதமாவது கிடைக்கிறது. இவர்கள் சங்கத்தை நடத்துகிறார்கள்; ஆனால் மகாசபையோரால் நியமிக்கப்படும் மேல்விசாரணைச் சபைக்கு உள்பட்டவர்கள். நிர்வாக சபையிலுள்ளவரை, வேலையிலிருந்து தள்ளிவைத்து, மகாசபையோரைக்கூட்டி, முடிவாய் விலக்கி விடும்படி சிபார்சுசெய்ய இவர்களுக்கு அதிகாரமுண்டு.

இச் சங்கங்களிலுள்ள குறைவுகள்.—கடன் வாங்கும் காரணத்தை விசாரணை செய்கிறதில்லை. வியவகார எல்லை நிர்ணயிக்கப் படாததாக இருப்பதாலும், மெம்பர்கள் ஜாஸ்தியாக இருப்பதாலும், ஒருவரை ஒருவருக்கு நன்றாய்த்தெரிவது சாத்தியமில்லை.

ரெய்பெய்ஸன் சங்கங்கள்.—இந்தியாவில் இப்போது ஏற்பட்டிருக்கும் கிராம நாணயச் சங்கங்களெல்லாம் அநேகமாய் இந்த வகையைச் சேர்ந்தவைகள். இவ்வகைச் சங்கம் முதல் முதல் ஜர்மனி தேசத்தில் ஏற்பட்டது. அதை ஏற்படுத்தியவர் ரெய்பெய்ஸன் என்பவர். சுவல்ப ஆஸ்திக்காரர் தான். தேகபலமும் இல்லாதவர். அவர் ஒரு கிராம அதிகாரி. ஏழை ஜனங்கள் படும் கஷ்டத்தைப் பார்த்துப் பரிதபித்து 1848-ம் ஷு தானியம் வரவழைக்கும்படி ஒரு கூட்டுச் சங்கம் ஏற்படுத்தினார். இது பிரபலிக்கவில்லை. இன்னும் ஏற்படுத்திய பலவகைச் சங்கங்கள் அழிந்துபோய் விட்டன. 1864-ம் ஷு ஏற்படுத்திய நாணயச் சங்கத்தின் மாதிரிதான் இன்னும் வழங்கி வருகிறது.

ரெய்பெய்ஸன் சங்கங்களின் முக்கியமான கோட்பாடுகளாவன: (1) வியவகாரஎல்லை சிறுவிஸ்தீரணத்துக்கு உள்பட்டதாயிருப்பது (2) ஒழுங்கான குணமுடையவர்களையே மெம்பர்களாய்ச் சேர்த்துக்கொள்ளுவது (3) பங்குத்தொகை இல்லாமலிருப்பது: அப்படியிருந்தாலும், சுவல்பமாய் இருப்பது (4) ஈவுத்தொகை (dividend) கொடாமல் லாபம் முழுமையும் க்ஷேமநிதியில் சேர்ப்பது (5) நீடித்த காலங்களுக்குக் கடன் கொடுப்பது (6) அந்த இடத்திலுள்ளவர்கள் டிபாஸிட்டையே முதலாய் வைத்துக்கொள்ளுவது (7) சம்பளமில்லாமல் நிர்வாகம் செய்வது.

இச்சங்கங்களின் நிர்வாகத்தில் பின் வரும் விசேஷ குணங்களுண்டு:—

1. சங்கத்தின் மேலதிகாரி மகாசபையோரே: சங்க சம்பந்தமான விஷயம் எதையும் அச்சபையோர் தீர்மானம் செய்யலாம்; நிர்வாகசபையோரின் உத்திரவுகளுக்குமேல் மறு விசாரணைசெய்து தீர்மானம் செய்யவும் அதிகாரமுண்டு.

2. நிர்வாக சபை 5-மெம்பர்களுள்ளது: அதில் ஒருவர் அக்கிராசனாதிபதி. இவர்கள் வருஷா வருஷம் தெரிந்தெடுக்கப் படுவார்கள். ஒரு வருஷம் நியமனம் பெற்றவரே மறுபடியும் நியமிக்கப்படலாம். சங்கத்தில் சேர விரும்புபவரைச்சேர்த்துக் கொள்ளலாமா என்று தீர்மானிப்பது நிர்வாக சபையோர் வேலை.

3. மேல் விசாரணைச்சபை 6-மெம்பர்களுக்குக் குறைந்திருக்கக்கூடாது. இவர்களையும் வருஷா வருஷம் மகா சபையோரே தெரிந்தெடுக்கிறார்கள். நிர்வாக சபையோர் செயல்களை ஊன்றிப் பார்க்கவும், கணக்குப் பரிசோதனை செய்யவும், சங்க விதிகளெல்லாம் அனுஷ்டிக்கப்பட்டனவா

என்று பார்க்கவும், மூன்று மாதத்துக்கு ஒருமுறையாவது கூட வேண்டும்.

நிர்வாக சபையோரின் தீர்மானங்களை நிறைவேற்ற ஒரு உத்தியோகஸ்தர் நியமிக்கப் படுகிறார்.

இச்சங்கங்கள் ஒன்றுடனொன்று துணைச்சங்கங்களாய்ச் சேருகின்றன. இதனால் அவைகளுக்கு தைரியம் உண்டாகிறது. சென்ட்ரல் பாங்கு, பணத்தேக்கமாயுள்ள சங்கத்திலிருப்பதை எடுத்து, பணக்குறைவாய் உள்ள சங்கத்தில் கொடுத்து, நிரவுகிறது.

ஷூல்ஸ் டெலிட்சுச்சங்கங்களுக்கும் ரெய்பெய்ஸன் சங்கங்களுக்குமுள்ள சில வித்தியாசங்கள்.—(1) முதலில் சொல்லியவகைச் சங்கங்களில் பணம் போட்டவர்களுக்கு வட்டியைத்தவிர லாபத்திலும் ஒருபாகங்கிடைக்கிறது. அதனால் டிபாசிட்டுச் செய்ய ஆசை ஜாஸ்தியாகிறது. இதிலிருந்து சிக்கனம் விருத்தியாகிறது. ஆனால் பணம் போடுகிறவர்களுக்குக் கிடைக்கும் லாபம் கடன் வாங்குகிறவர்கள் தலையில் தானுறக்கும். (2) ரெய்பெய்ஸன் சங்கத்தில் வியவகார விஸ்தீரணத்துக்கு எல்லையுண்டு. மற்றொருவகைச் சங்கத்திலில்லை. ஆதலால் மெம்பர்களுக்குள் நெருங்கின பழக்கமே யில்லாமலிருக்கிறது. ஒருவருக்கு மற்றொருவரைப்பற்றித் தெரிய இடமில்லை. ஆகையால் இச்சங்கங்களில், நபர் ஜாமீன் பேரில் கடன் கொடுக்க முடியாது. (3) ஷூல்ஸ் டெலிட்சுச் சங்கங்களில், கிட்டின தவணைக்குத்தான் கடன் அகப்படும்; ஒரே தடவையில் முழுத்தொகையும் திருப்பிக் கொடுக்கவேண்டும். ரெய்பெய்ஸன் சங்கங்களிலோ, நீண்டதவணைக்குக் கடன் அகப்படுவதுடன், சில்லரையாகத் திருப்பிக் கொடுக்கலாம். (4) ரெய்பெய்ஸன் சங்கங்கள் கொடுத்தகடனை உபயோ

க்கும் வழிகளை கவனித்துப் பார்க்கின்றனர். அப்படிச்செய்வது ஷூல்ஸ் டெலிட்சுச் சங்கங்களில் சாத்தியப்படாது.

லுஜாட்டி ஜன சகாயபாங்குகள்.—ஜர்மனி தேசத்தில் உள்ள ஷூல்ஸ் டெலிட்சு பாங்குகளைப்போல் இட்டலி தேசத்தில் லுஜாட்டி பாங்குகளிருக்கின்றன. லுஜாட்டியென்பவர் முதலில் ஒரு காலேஜில் செல்வசாஸ்திர பண்டிதராயிருந்து பிறகு அந்ததேசத்து ராஜாங்கத்தில் பணம் வரவு செலவு செய்யும் மந்திரியானார். அவர் ஏற்படுத்திய சங்கங்களில், ஜர்மனிச் சங்கம்போலல்லாமல், உத்தரவாதம் நிர்ணயிக்கப்பட்ட முறைதான் அனுஷ்டிக்கப்படுகிறது. மெம்பர்கள் போட்டிருக்கும் முதல்தான் கடன்களுக்கு முக்கிய ஜவாப்பு. போட்ட முதலுக்காக மெம்பர்களுக்கு சுவல்பவட்டியும், நிர்வாக சபையார்களுக்கு சுவல்ப வெகுமானமும் கொடுக்கப்படுகிறது. ஷூல்ஸ்டெலிட்சுச் சங்கங்களில் போலவே இச்சங்கங்களிலும் கடன் 3-மாதத் தவணைக்குத்தான் கொடுப்பது வழக்கம். ஆனால் வேண்டுபவர்களுக்கு தவணை யப்போதைக்கப்போது நீட்டிக்கொடுக்கப்படும். இந்த தேசத்தில் ஏற்பட்டிருக்கும் அநேக நகரச் சங்கங்கள் இம்மாதிரியே அமைக்கப்பட்டிருக்கின்றன. மேற்சொல்லிய மூவகைச் சங்கங்களின் கொள்கைகளை அந்தந்த இடத்துக்குத் தக்கபடி கொஞ்சம் மாற்றி வேறுவகைச் சங்கங்களும் ஏற்படுத்தி இருக்கின்றனர். அவைகள் பின்வருவன:—

ஓலம்பர்குச் சங்கங்கள்.—ஜர்மனி தேசத்திய ரெய்பெய்ஸன் பாங்கிகளின் முறைகளைப் பெரும்பாலும் இச்சங்கங்கள் அனுசரிக்கின்றன. ஆனால் மெம்பர்கள் மூலதனத்திற்காகக் கொஞ்சமாவது சந்தாத்தொகை செலுத்த வேண்டும். நீடித்த தவணைக்குக் கடன் கொடுத்தாலும், அது, மூன்று மாதத்திற்கு ஒருமுறை புதுப்பிக்கப்படவேண்டும்.

ஹாஸ் பாங்கிகள்.—இவ்வகைச் சங்கங்கள் ஹாஸ் என்பவரால் முதல் முதல் ஏற்படுத்தப்பட்டு ஜர்மனியில் இப்போது ஏராளமாய்ப் பரவியிருக்கின்றன. இப்பாங்கிகளின் கொள்கைகளில் ஷூல்ஸ் டெலிட்ச முறைகளில் சிலவும் ரெய்பெய்ஸன் முறைகளில் சிலவும் கலந்திருக்கின்றன. சந்தாதாரர்களின் பொறுப்பு சந்தாத்தொகை யளவுமட்டும் அல்ல. இன்னும் கொஞ்சம் தொகை சேர்ந்துப் பொறுப்புக் கட்டப்படுகிறது: உதாரணம்:—சந்தாத்தொகை ஒரு ரூபாயாய் இருந்தால், பொறுப்புத்தொகை ஐந்து ரூபாயாகவிருக்கலாம். இப்படிச் செய்வதில் பிரமாணம் ஜாஸ்திப் படுவதால், வெளியிலிருந்து எளிதாய் சங்கம் கடன் வாங்க முடியும்.

———:*:———

5-ஆவது அத்தியாயம்.

———:-:———

இந்தியாவில் நகர பாங்கிகள்.

1904-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்டு X-வது ஆக்ட் 3-வது பிரிவுப்படி, இந்தியாவில் ஏற்பட்ட சங்கங்கள் கிராமச் சங்கங்களென்றும், நகரச்சங்கங்களென்றும், பிரிக்கப்பட்டன. ஒரு கிராமச்சங்கத்தில் உள்ள மெம்பர்களில் ஐந்தில் நாலு பாகத்துக்குக் குறையாமல் வியவசாயிகளும், ஒரு நகரச்சங்கத்தில் ஐந்தில் நாலு பாகத்துக் குறையாமல் வியவசாயத்தொழில் செய்யாதவர்களுமாக இருக்கவேண்டியிருந்தது. 1912-ம் வருஷத்து II-வது ஆக்ட், 1904-ம் வருஷத்து ஆக்டை ரத்துசெய்துவிட்டது. இது நகரச்சங்கமென்றும், கிராமச்சங்கமென்றும் ஏற்பட்டிருந்த வித்தியாசத்தைத் தள்ளி

விட்டது. இனி சங்கங்கள் பொறுப்புவரையறுக்கப்பட்ட சங்கமென்றும் பொறுப்புவரையறுக்கப்படாத சங்கமென்றும் தான்பிரிக்கப்படவேண்டும். ஆனால், யோசித்துப்பார்த்தால், இவைகள், கிட்டத்தட்ட, முறையே நகரச்சங்கமாகவும் கிராமச் சங்கமாகவும் தான் இருக்கும்.

நகரச்சங்கங்கள், பெரும்பாலும், பொறுப்புவரையறுக்கப்பட்டதாகவே இருக்கின்றன. புது ஆக்டுப்பிரகாரம், எந்தச் சங்கத்திலாவது, ரிஜிஸ்தரான சங்கம் மெம்பராக இருந்தால் அந்தச் சங்கத்தின் பொறுப்பு வரை அறுக்கப்பட்டதாயிருக்கவேண்டும். பொறுப்புவரை யறுக்கப்பட்ட சங்கங்களில் ஒரு மெம்பருக்கும் மொத்த மூலதனத்தில் ஐந்தில் ஒன்றுக்கு மேல் இருக்கக்கூடாது, தவிரவும் ஒருவருக்கும் மூலதனத்தில் ரூபாய் ஆயிரத்துக்குமேல்பாத்தியம் இருக்கக் கூடாது. இந்த நிர்ப்பந்தங்கள் மெம்பராயிருக்கும் சங்கங்களுக்குக் கிடையாது. இந்த ஆக்டுப் பிரகாரம் ரிஜிஸ்தராகும் நகரச் சங்கங்களின் பெயருக்குக் கடைசியில், "லிமிடெட்" என்றும் வார்த்தை ஒட்டப்பட வேண்டியது.

நகரச்சங்கங்களின் ஏற்பாடும், கொள்கைகளும், வேலை செய்யும் முறைகளும், இப்போது விவரிக்கப்படும்.

சங்கங்களின் கருத்துக்களும் பிரயோஜனங்களும்:—நகரச் சங்கங்களின் பிரதானக் கருத்து சங்கத்தார்களுக்கு இலகுவான வட்டியில் பணம் சேகரித்துக் கொடுப்பதுதான். நகரங்களில் வாசம் செய்யும் தொழிலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் சாதாரணமாய் கடன் கிடைக்கிறதில்லை. அப்படிக் கிடைத்தாலும், வட்டி அக்கிரமமாயிருக்கிறது. இவர்களில் சிலருக்கு சாமான்கள் உற்பத்தி செய்யும் திறமை யிருக்கலாம்; அப்படி யிருந்தாலும் தொழி

ஆரம்பிக்க முதலில்லாமல் அவர்கள் சும்மாவிருப்பதும் உண்டு. சென்னையில் ரிக்ஷாவண்டி இழுப்பவனை உதாரணமாய் எடுத்துக் கொள்ளுவோம். அவன் அன்றை அன்றைக்கு வண்டியை வாடகைக்கு வாங்கிக் கொள்ளுகிறான். தனக்குக் கூலி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் வாடகை கொடுத்தே தீரவேண்டும். வாடகை 6-அணா ஆகிறது. ஒரு புதியவண்டி சுமார் ரூ. 80-விலை இருக்கும். ரிக்ஷாக்காரனுக்கு இந்தத் தொகை கடன் அகப்பட்டு, நாளைக்கு 6-அணாவீதம் கடனைத் திருப்பிக்கொடுக்கவும் உத்திரவு கிடைத்தால், அவன் 8-மாதத்தில் கடனை அடைத்துவிடலாம். ரிக்ஷாவுக்குச் சொந்தக்காரன் என்னும் பதவியையும் அடைவான். அவனுக்கு அது பெருமையாயிருக்கும். இந்த உதாரணத்திலிருந்தே நகரச் சங்கங்களின் இன்னொரு பிரயோஜனமும் விளங்கும்; இவைகள் அடிக்கடி டிபாசிட்டுக் கட்டும்படி கட்டாயம்செய்வதால் தப்பாமல் பணம் மிகுத்திச்சேர்த்து வைப்பதைத் தூண்டுகின்றன. ரிக்ஷாக்காரர்கள் ஒரு சங்கமாகச் சேர்ந்துவிட்டால் அவர்களுக்குள் ஓர்மை உணர்ச்சி விருத்தியாகிறது. அவர்கள் தங்களுக்கு வேண்டிய பொது சௌகரியத்தைத் தேடிக்கொள்ளலாம். தவிரவும் தமக்குள் குடி முதலிய வரைகடந்த நடவடிக்கைகளை அடக்கிக் கொள்ளலாம். இச்சங்கம் மெம்பர்களுக்குத் தொழில் முறையும் நிர்வாக சக்தியும் உண்டாகும்படி செய்கிறது. மிஸ்டர் டிவைன் என்பவர் சொல்லுகிறது என்னவென்றால்:—"இப்படி ஒவ்வொருவருக்கும் செல்வமும் விருத்தியாகி குணமும் இருப்பதால் தேசத்திலேயே தரித்திரமும் கஷ்டமும் குறைகிறது. ஜனங்களுக்கு தம்மிடத்தில் நம்பிக்கையும், சுய உதவி செய்துகொள்ளும் குணமும், ஏற்படுகிறது. தொழில்கள் பிரபலிக்கின்றன; ஐசுவரியம் பெருகுகிறது." இச்சங்

கள் தேசத்திலுள்ள புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் சுயத்தியை காட்டவேண்டும் என்பதைக் கற்பிக்கிறது. இதுதான் இவைகளால் ஏற்படும் நன்மைகளுக்கெல்லாம் பெரும்நன்மை.

ஏற்பாடு.—நகரங்களில் சாதாரணமாய் ஒருவரை ஒருவருக்குத் தெரியாது. ஆதலால் சங்க மெம்பர்கள் ஒவ்வொருவரும் கூட்டாயும் தனியாயும் சங்கத்தின் முழுக் கடனுக்கும் ஜவாப்பாய் நிற்பது சாத்தியமில்லை. ஆகவே நகரச் சங்கங்கள் அநேகமாய் பொறுப்புவரை யறுக்கப்பட்ட முறையில்தான் ஏற்படுகின்றன.

வியவகார எல்லை.—கிராமச் சங்கத்தைப்போல் நகரச் சங்கத்தின் வியவகார எல்லை ஒரு கிராமத்துக்கு மேல்படக் கூடாது என்னும் நிபந்தனை கிடையாது. மெம்பர்கள் ஒத்துமையாய் வேலை செய்வதற்கு ஒருவரை ஒருவருக்கு நன்ருய் நேரில் தெரியவேண்டுமென்பது வாஸ்தவந்தான். ஆயினும் ஊருக்குள்ளேயே அங்கங்கு பிரிவுகளேற்படுத்திக்கொண்டு நகரங்களில் பெரியசங்கம் இருப்பதற்கு யாதொரு ஆக்ஷேபணையு மில்லை.

பிரவேசக்கட்டணம்; பங்குகள்; பங்கு மூலதனம்.—சங்கங்களில் சாதாரணமாய் பங்கு ஒன்றுக்கு காலணமுதல் ஒரு ரூபாய் வரையில் பிரவேசக்கட்டணம் கொடுக்கும்படி ஏற்படும். ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு பங்காவது இருக்கவேண்டும். ஒரு மெம்பருக்கு இருக்கக்கூடிய பங்குகளுக்கு வரை ஏற்படாவிட்டால், ஜாஸ்தியாக லாபத்தை அடையவேண்டுமென்னும் எண்ணத்தோடு லேவாதேவி செய்யும் சாதாரணக் கூட்டு முதல் பாங்குகளைப்போலவே, இச்சங்கங்களும் ஆகிவிடும். சட்டத்தால் ஏற்பட்டிருக்கிறவரைகூடப் போதாது. ஐம்பது பங்குகள் எல்லையாக விதிக்கலாம்—ஆனால்

அதுவும் ஜாஸ்திதான். நகரத்திலுள்ள ஜனங்கள் எவ்வளவு, மெம்பராக வரக்கூடியவர்கள் எத்தனைபேர் என்னும் விஷயங்களை கவனித்துப் பங்கு மூலதனம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

பங்குகளை மாற்றல்.—பழைய ஆக்டுப்பிரகாரம் பங்குகளைப் பராதீனம் செய்ய முடியாது. புது ஆக்டுப்படி பொறுப்புவரையறுக்கப்பட்ட சங்கங்களில் இந்தநிர்ப்பந்தம் கிடையாது. ஒரு மெம்பர் இறந்தால், அவருடைய வார்சு இறந்தவரின் பங்கைத் தன் பேருக்கு மாற்றவேண்டுமென்று பாத்தியங் கொண்டாடலாம். ஆகிலும் கூட்டுறவுச் சங்கங்களில், பங்குகளல்ல, மெம்பரின் யோக்கியதையே பிரதானம்—என்பது மூலாதாரக் கொள்கை யாதலால், வார்சுக்குப் பங்குகளை மாற்ற மெம்பர்களுக்கு இஷ்டமில்லாவிட்டால், அவர்களை நிர்ப்பந்தம் செய்ய 1912-ம் வருஷத்திய ஆக்டில் இடம் கொடுப்பது கருத்தாக இருந்திருக்கமுடியாது என்று விளங்குகிறது. ஐக்கிய நாணயச்சங்கங்கள், தங்கள் கருத்தை மறந்து, கூட்டுமுதல் பாங்கிகள் நிலைமைக்கு நழுவாமல் இருக்கவேண்டுமானால், முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய தொன்றுண்டு; அதாவது: ஒருவருக்குப் பங்குகள் வாங்கப் பணமிருப்பதனால்மட்டுமாவது, இறந்துபோனமெம்பர் சொத்துக்கு வார்சு பாத்தியமிருப்பதினால் மட்டுமாவது அவரைச் சங்கத்துக்குள் புகவிடக்கூடாது.

ஒரு மெம்பர் இறந்தாலும், அவர் சொத்து, சங்கத்தின் உபவிதிகளில் சொல்லப்பட்ட அளவுக்கு, இறந்தது முதல் ஒரு வருஷத்துக்குக் கட்டுப்பட்டிருக்கும்; ஒரு மெம்பர் தானாக விலகினாலும், இதே மாதிரி, இரண்டு வருஷம் வரையில் அவர் கட்டுப்பட்டிருப்பார்.

மூலதனம்.—சங்கங்களின் வியவகாரங்களை நடத்த வேண்டிய முதல் பின்வரும் வழிகளால் கிடைக்கிறது. (1) பங்குத் தொகையும், பிரவேசக்கட்டணமும் (2) சங்கம்வாங்கும் கடன்கள் (3) மெம்பர்களும், மெம்பரல்லாதவர்களும், சங்கத்தில் வைக்கும் டிபாசிட்டுகள்.

கடன்கள்.—சங்கங்கள், மெம்பர்களில்லாதவர்களிடத்திலிருந்து எவ்வளவு கடன்படலாமென்று, உபவிதிகளால் நிர்ணயித்துக்கொள்ளுகின்றன. இது சாதாரணமாய் ரூ. 20,000க்கு அதிகப்படாது. மற்றசங்கங்களிலிருந்தும் கடன் வாங்கப்படுகிறது. விசேஷமாய் சென்ட்ரல் பாங்கிகளிடத்தில் தான் கடன் வாங்குவது வழக்கம். பொறுப்புவரையறுக்கப்பட்ட சங்கங்களுக்கு பங்குத்தொகை எவ்வளவு இருக்கிறதோ அதற்கு மேல் சென்ட்ரல்பாங்கிகள் கடன் கொடுப்பதில்லை.

டிபாசிட்டுகள்.—மெம்பர்களும் மற்றவர்களும் சங்கத்தில் போட்டுவைக்கும் பணத்துக்கு டிபாசிட்டு என்றுபெயர். அனேகவிதமாய் டிபாசிட்டுகள் வாங்கிக்கொள்வதுண்டு:—

நிலையான டிபாசிட்டு. (பிக்சட் டிபாசிட்டு)—இது, இவ்வளவு காலத்துக்கு என்று ஏற்படுத்திக்கொண்டு கட்டிவைக்கும் தொகைக்குப்பெயர். மெம்பர்களும் மெம்பர்களல்லாதவர்களும் இப்படிப்பணம் கட்டலாம்.

எதிர்கால உபயோகத்திற்காகக் கட்டிவைக்கும் டிபாசிட்டுகள் (பிராவிடெண்டு டிபாசிட்டு)—இத்தக்கட்டணம் ஒவ்வொரு மெம்பரும் வருஷம் ஒருமுறை கட்டவேண்டும். சமயம் போதுக்கு தங்களுக்கு உதவுவதற்காக ஒவ்வொரு மெம்பரும் வருஷத்தில் கொஞ்சம் பணம் சேர்த்துவைப்பது யுக்தமென்று எண்ணி, இத்தக்கட்டணம் கட்டியேதீரவேண்டுமென்று, சில சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அடிக்கடி கட்டும் டிபாசிட்டு.—ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் குறிப்பிட்ட தொகையை மாதாமாதம் கட்டுவதாய் ஒப்புக்கொண்டு கட்டும் தொகைதானிது. ஒரு ரூபாயாவது சில்லரையில்லாத அநேகம் முழுரூபாய்களாவது மாதாமாதம் கொடுப்பதாய் ஒப்புக்கொள்ளலாம். இப்படி 24 மாதம், 45மாதம், அல்லது 84 மாதம் கட்டிக்கொண்டு வருவதாய் ஒப்புக்கொள்ளலாம். இந்தக்காலங்கள் சென்றபின்பு முறையே ரூ. 25-8-0, ரூ. 50, அல்லது ரூ. 100 பணங்கட்டுவோர்களுக்குக் கிடைக்கும்.

கூட்டுச்சீட்டு டிபாசிட்டுகள்—என்பது மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகை கட்டுவதற்குப்பெயர். கூட்டுச்சீட்டு சென்னைராஜதானியில் அதிகமாய் வழங்கிவருகின்றது. ஏலச்சீட்டென்றும் குலுக்குச்சீட்டென்றும் இரண்டுவகைக் கூட்டுச்சீட்டு உண்டு.

கடைமுதல் கணக்குகள்.—மெம்பர்களுக்கு பாங்கில் பத்து வரவுவைத்துக்கொள்ள அநுமதிகொடுக்கலாம்; அதாவது, கெடுவொன்றும் இல்லாமல், வேண்டும்பணத்தைக்கட்டி, வேண்டும்போது வாங்கிக்கொள்ள உத்தரவு கொடுக்கலாம். இந்த ஏற்பாட்டில் மெம்பர்கள் கட்டும் பணத்துக்கு வட்டிவீதம் எப்போதும் குறைவாக இருக்கும்: கால்வட்டிக்கு மேற்படாது.

பங்கு மூலதன டிபாசிட்டுகள்.—பங்குகளின் தொகை அதிகமாய் இருந்தால், தவணை தவணையாகக் கட்டும்படி ஏற்பாடு செய்து கொள்ளுவது உண்டு: இது பங்குத்தொகையே. ஆதலால் வாஸ்தவத்தில் டிபாசிட்டு அல்ல.

கடன்களும் வட்டிவீதமும்.—கடன்கள் மெம்பர்களுக்குத்தான் கொடுக்கப்படும்; அதுவும் பிரயோசனமுள்ள தே

ன்று நிர்வாக சபையாருக்குத் தோன்றும் காரியங்களுக்குத் தான். அவைகள், பூஸ்திதியின் ஜாமீன்பேரிலாவது, மெம்பருடையவும் இன்னும் ஒன்று அல்லது இரண்டு நபர்களின் ஜாமீன் பேரிலுமாவது, கொடுக்கப்படும். ஆனால் கூட்டுறவின் ஆதாரக் கொள்கைகளின்படி, நபரின் ஜாமீன்பேரில் கடன் கொடுப்பதுதான் இலக்ஷியம். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் ஏழைஜனங்களுக்காகவே ஏற்பட்டிருக்கின்றன. ஈடாகவைக்க அவர்களுக்கு நிலமாவது வீடாவது இருப்பது அரிது. ஆயினும் இதுவரையில் சங்கங்களில் கொடுக்கப்பட்ட ஜாமீன்களில், அசையாப்பொருள் ஜாமீன்தான் மிகுதியாக இருக்கிறது. அதுவும் இந்த தேசத்தில், பந்தகங்கள், சாதாரணமாய் எண்ணப்படுவதுபோல், அவ்வளவு உயர்ந்த ஜாமீன் அல்ல, என்று நிக்கல்ஸன் துரையவர்கள் கண்டிப்பாய் சொல்லியிருக்கிறார். "(1) நாட்டுப்புறங்களில், நிலத்தில் ஒருவருக்கிருக்கும் பாத்தியத்துக்கு ரிகார்டு மூலமாய் ஆதாரமிருப்பது அரிது, என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்; (2) ரிகார்டு ஆதாரவு இருந்தால்கூட, முன்பாத்தியங்களுண்டா என்று பரிசோதிக்க ஜாஸ்திச் செலவாகும்; அப்படிச் செலவு செய்தாலும், நம்பக்கூடியதாய் சமாசாரம் ஒன்று மகப்படாது; (3) இந்துக்களைப் பத்தினவரையில், குடும்ப சொத்தில் ஒருவருக்கிருக்கிற பாத்தியம் எவ்வளவு என்று ஒரு போதும் அறிய முடியாது." தவிரவும், பந்தகத்தின் பேரில் கடன் கொடுக்கப்பட்டால், விசேஷமாய் வியாஜ்யம் செய்தால் தான் பணம் வசூலாகும். நாட்டுப் புறங்களில், ஒரு சொத்தை எப்படியாவது கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்ற கருத்திருந்தால்தான், அந்த சொத்தின் ஜாமீன் பேரில் அப்படி ஆசையுள்ளவர்கள் கடன்கொடுக்கிறார்கள். குறி வைக்கப்பட்ட நிலத்தை அடைய இது ஒரு சுலுவான வழி, என்ற

சாதாரணமாக எண்ணப்படுகிறது. ஒரு பாங்குக்கு பங்குக் கடன்கள் அவ்வளவு தகுதி அல்ல. ஏனென்றால், பத்த டிக்கிரியை நிறைவேற்ற வெகுகாலம் பிடிக்கும்.

சாதாரணமாய் ஒருவருஷ கெடுவுக்குத்தான் கடன் கொடுக்கப்படும்; ஆகிலும், நாலில் அல்லது ஐந்தில் ஒருபாகம் வருஷத்துக்குள் செலுத்தப்பட்டால், கெடு ஒத்திக் கொடுக்கப்படும். அப்படி ஒத்திக் கொடுப்பதை எல்லாம் சேர்த்து கெடு ஐந்து வருஷத்துக்கு மேல் கிடைப்பது அரிது.

வட்டி வீதம் நூத்துக்கு மாதத்துக்கு அரைக்குக் குறையாது, முக்காலே அரைவீசத்துக்கு மேலும் போகாது.

க்ஷேமநிதி.—ஒவ்வொரு சங்கமும் ஒரு க்ஷேமநிதி சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சட்டத்தில் விதி ஏற்பட்டிருக்கிறது. இப்படிச் செய்வதால் பாங்குக்கே சொந்தமாய் ஒரு நிதி ஏற்படுகிறது. அதில் ஒருமெம்பருக்கும் யாதொரு விதமான தனி பாத்தியமும் கிடையாது. மெம்பர்களுக்கு எல்லாம் இது பொது. இப்போது புதிதாய் ஏற்படும் சங்கங்களெல்லாம், சங்கம் கலைந்தால்கூட ஊரில் பொது நன்மையான காரியத்துக்குத்தான் இந்தப் பணத்தை உபயோகப் படுத்தவேண்டும் என்று ஒரு ஷரத்து உபவிதிகளில் ஏற்படுத்திக் கொள்ளுகின்றன. எதிர்பாராது திடீரென்று உண்டாகும் நஷ்டத்துக்கு ஈடுபண்ண இந்த நிதி சேர்க்கப் படுகிறது. பொறுப்புவரையறுக்கப்பட்ட சங்கங்கள் லாபத்தில் 4-ல் ஒருபாகமாவது க்ஷேமநிதியுடன் சேர்க்கவேண்டும்.

லாபப் பிரிவினை.—லாபத்தில் 4-ல் ஒருபாகத்தை க்ஷேமநிதியுடன் சேர்த்த பிறகு பாக்கியை பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்கள் இஷ்டப்பிரகாரம் உபயோகப் படுத்திக்

சொன்னாம்.. ஆனால் 1912-ம் ௵த்து II-வது ஆக்ட், 34-வது செக்ஷன், இம்மாதிரிச் சங்கங்கள் கூட சேமநிதிக்குப் போட்டது போக பாக்கியில் 100-க்குப் பத்துக்குமேல் தர்மகாரியங்களுக்குச் செலவிடக்கூடாது, என்று விதிப்பது போல் தோற்றுகிறது. விநியோகத்துக்கு அருகமாயுள்ள தொகையை நிர்வாகசபையோருக்கும் காரியதரிசிக்கும் கஜான்ஜிக்கும் வெகுமானம் கொடுக்கவும், மெம்பர்களுக்கு ஈவுகொடுக்கவும், உபயோகப்படுத்துவது வழக்கம். கூட்டுறவின் உண்மை முறைப்படி பார்த்தால் இந்தப்பணம் முழுவதையும் மெம்பர்களுக்குக் கொடுக்கும் பணத்தின் வட்டி வீதத்தைக்குறைக்க உபயோகப் படுத்தவேண்டும். வெகுமானம் ஜாஸ்தியாய் வேண்டுமென்று பறப்பது எப்போதும் கெட்ட குறி. ஏனென்றால் இது பொது நன்மைக்காக உழைக்காமையைக் காட்டும். ஆனரபில் மிஸ்டர் அட்கின்ஸன் துரையவர்கள் சேலத்தில் செய்த உபந்யாசத்தில் சொன்னதாவது:—“ஐக்கிய நாணயச் சங்கங்களின் மெம்பர்களுக்கு வட்டி வீதம் குறைவது ஒன்றுதான் நியாயமான வெகுமானம், என்பதை நீங்கள் எப்போதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். சம்பளமாவது, வெகுமானமாவது கேட்பது கூட்டுத்தொழில் முறைக்கு விரோதம். அந்த அபேக்ஷை இருந்தால் கூட்டுறவினர் என்று நடிக்கக்கூடாது. சாமானிய பாங்கு மெம்பர்கள் அல்லது சாவகார்களென்று, மூடுமந்திரமொன்றுமில்லாமல், சொல்லிக்கொண்டு விடலாம்.”

நிர்வாகம்.—கூட்டுறவுச் சங்கங்களை மெம்பர்களே தங்கள் உபயோகத்துக்காக நடத்துகிறார்கள். மெம்பர்களுக்குக் குறைந்த வட்டிக்குப் பணம்தேடிக் கொடுப்பது இவைகளின் கருத்தாகையால் சங்கம் நடத்துவதின் செலவு கூடியமட்டும்

குறையவேண்டும். அதை நடத்துபவர்களுக்கு அநேகமாய் ஒன்றும் லாபம் கிடைக்காது. சில இடங்களில் லாபத்தில் ஒரு சுவல்பபாகம் காரியதரிசிக்குக் கொடுப்பது உண்டு; நிர்வாக சபையோருக்கும் கொஞ்சம் கொடுப்பதும் உண்டு; ஆனால் எல்லாச் சங்கங்களும் லாபத்தை அநேகமாய் வட்டியைக் குறைக்கவும், மெம்பர்களுக்கு ஈவுகொடுக்கவும் உபயோகப்படுத்தவேண்டும்.

சங்கம் நடத்துவதில் பிரதம அதிகாரம் மகாசபையோருடையது. சங்கத்தின் பரிபாலனத்துக்கு வேண்டிய உபவிதிகளை மகாசபையார்தான் ஏற்படுத்துகிறார்கள். சங்கத்திலுள்ளவர்கள் எல்லாரு மாய்ச்சேர்ந்து வியவகாரம் நடத்துவது சாத்தியமில்லை. ஆகையால் தங்கள் அதிகாரத்தை, ஒரு நிர்வாகசபையை அல்லது பஞ்சாயத்தை நியமித்து அச்சபையாருக்கு ஒப்புவிக்கிறார்கள். இச்சபை 3-பேருக்குக்குறையாது. இந்தியாவில் சாதாரணமாய் 5-பேர்கள் நியமிக்கப் படுகிறார்கள். சங்கத்தின் வேலையை இவர்கள்தான் நடத்துகிறார்கள். அப்போதைக் கப்போது சங்கப் பரிபாலனத்துக்கு வேண்டியதெல்லாம் அவர்களே செய்கிறார்கள். அவர்கள் அவசரத்துக்குத் தகுந்தபடி நடவடிக்கை நடத்துகிறார்கள். அவர்களே தமக்குள் ஒருவரை அக்கிராசனாதிபதியாகவும், ஒருவரைக் காரியதரிசியாகவும், மற்றொருவரை கஜான்ஜியாகவும் நியமித்துக்கொள்ளுகிறார்கள். பெரிய சங்கங்களில் ஒரு உப அக்கிராசனாதிபதியும் துணைக் காரியதரிசியும் நியமித்துக் கொள்ளுகிறார்கள். சங்கத்தின் கணக்குகளைச் சரியாய் வைப்பது நிர்வாக சபையோர்வேலை; இதில் பிரதானபளுவு காரியதரிசி யுடையது. வியவகாரங்கள் அதிகமாயிருந்தால் சம்பளம் கொடுத்து ஒன்று அல்லது இரண்டு குமாஸ்தாக்களை நியமித்துக் கொள்ளலாம். மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ளு

வதும், கடன் கொடுப்பதும் இவர்களுடைய வேலைதான். ஐரோப்பிய தேசங்களில் நிர்வாக சபை மெம்பர்கள் அந்த உத்தியோகத்திலிருக்கும் போது சங்கத்திலிருந்து கடன் படக்கூடாது என்னும் நிபந்தனை ஏற்படுத்திக்கொள்ளுவது வழக்கம். அவர்கள் ஒரு தடவை நியமிக்கப்பட்டால் சாதாரணமாய் 3-வருஷம் உத்தியோகத்தில் இருப்பது வழக்கம். முக்கியமான விஷயங்களை மகா சபையோரே கவனிக்கவேண்டும். சில உதாரணங்கள்:—விதிகளை மாற்றுவது, ரிஜிஸ்தரார் அவர்களுக்கு அனுப்பவேண்டிய வருஷாந்திர ரிபோர்ட்டு, யாராவது ஒரு மெம்பரை சங்கத்திலிருந்து தள்ளுவது, சங்கமெம்பர் யாராவது பஞ்சாயத்தார் பேரில் செய்யும் பிராதைக்குறித்து ஆலோசித்தல்.

சில பெரிய பாங்குகளில் "தெரிந்தெடுக்கும் சபை" என்று மொன்றிருக்கிறது. அதன் மெம்பர்களையும் மகா சபையார்கள் தெரிந்தெடுக்கிறார்கள். இந்தச் சபையில் 30-அல்லது 40-மெம்பர்கள் இருக்கலாம். மகா சபையார்களிடமிருந்து அதிகாரம் பெற்றவர்களாய், நிர்வாக சபையாரை இவர்கள் தெரிந்தெடுக்கிறார்கள். ஆலோசனை சபை யொன்றும் சில சங்கங்களில் இருக்கிறது. இதன் அலுவல் சாதாரணமாய் மகா சபையார்களுக்கு ஆலோசனை சொல்லுவதுதான். ஆனால் சில விடங்களில் பொறுக்கி யெடுக்கும் சபையின் அதிகாரத்தையும் பெற்றிருக்கும். ஐரோப்பிய தேசங்களின் சங்கங்களுக்கு, மேற்சொன்னவைகளோடுகூட பரிசோதனைச் சபை யென்றும் ஒன்றிருக்கிறது. அதன் மெம்பர்கள் நிர்வாக சபையின் வேலையில் பிரவேசிக்க முடியாது. ஆகிலும் அது செய்கிற வேலையைப் பரிசோதித்துப் பார்க்க பூரணமாக அதிகார முண்டு.

கடன் கொடுக்கல் வாங்கல் செய்வதிலும் கணக்கு வைப்பதிலும், ஜாக்கிரதை யிருந்தால்தான் சங்கம் க்ஷேமமாயிருக்கும். சரியாய்க் கணக்குவைப்பது வெகு முக்கியமானது. ரிஜிஸ்தரார் அவர்கள் சில கணக்குகளை எல்லாச் சங்கங்களும் வைத்தே தீரவேண்டு மென்று உத்தரவிட்டு இருக்கிறார். சங்கத்தின் பருமனுக்கும் லேவாதேவிக்கும் தகுந்தபடி கணக்குப் புஸ்தகங்கள் வைக்க வேண்டும். சங்கங்களின் மெம்பர்கள் அநேகமாய் சாமானிய ஜனங்களா யிருப்பார்களாதலால், அவர்களுக்குச் சுளுவாய்ப் புரியும்படியாய் சிடுக்கில்லாத கணக்குகள் வைக்கவேண்டும். ஸேவிங்ஸ் டிபாசிட்டுக் கணக்குத் தவிர மற்றக் கணக்குகள் பகிரங்கமாய் வைக்கப் படவேண்டும். கணக்குப் பரிசோதனைக்கும், கணக்கு எழுதுவதை மேல்விசாரணை செய்யவும், வேண்டியமட்டும் இடம் இருக்கவேண்டும். கணக்கு அடிக்கடி ஒழுங்கு பார்ப்பது வியாபார தோரணை. ஒவ்வொரு மெம்பரும் சங்கத்தின் வேலையில் கவலை எடுக்கவேண்டும். இச்சங்கங்களில் ஆரம்பத்திலும், பின்பு வெகுகாலம் வரைக்குங்கூட, அதிகமுதல் இருக்க இடமில்லை. இது இல்லாததற்கு பதிலாய் ஒழுங்கான வேலையும், ஜாக்கிரதையும் வேண்டும்.

கோர்ட்டில் தாவா செய்வது அவசியமாகும்படி நடந்துகொள்ளும் மெம்பர்களைத் தள்ளிவிடும்படி எல்லாச் சங்கங்களிலும் ஒரு உபவிதி ஏற்பட்டிருக்கிறது. தவிரவும், சங்கத்தில் இருக்க அனருகமாயிருக்கும் மெம்பரையும் சங்கத்தை விட்டுத் தள்ளிவிடலாம்.

நகரங்களில் விசேஷச் சங்கங்களும் வகுப்புச் சங்கங்களும்—நகரங்களில் ஒரு ஆபிசில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்காவது, வரியுள்ள கடைக்காரர்கள், நெசவுகாரர்

களர், வண்டி ஓட்டுகிறவர்கள் மற்ற இப்படிப்பட்ட வகுப்பினர்களுக்காக வாவதுத் தனித்தனியாய்ச் சங்கங்கள் ஏற்படுத்தலாம். இவைகள் அதிக உபயோக முள்ளவையாய் இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. இம்மாதிரிச் சங்கங்களில் சேர்ந்திருப்பவர்களுக்கு அவரவர்கள் மாதச் சம்பளம் அல்லது வரும்படிக்குத்தக்கபடி கடன் கொடுக்கப் படுகிறது. வாங்கும் கடனை மாதம் கொஞ்சமாய் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யப் படுகிறது. சிலவேளையில் வாரம் கொஞ்சமாய் திருப்பிக் கொடுக்கும்படியும் ஒப்பந்தம் செய்து கொள்ளுவது உண்டு. கடன்கள் அநேகமாய் சிறு தொகைகளாக விருக்கும். திருப்பிக் கொடுக்க கெடுவும் சுவல்பகாலமாகத்தானிருக்கிறது. இம்மாதிரிச்சங்கங்களில் மெம்பர்களுக்கு ஒருவருக்கொருவரைத் தெரியும். ஆதலால் பொறுப்பு வரையறுக்கப் படாமலிருந்தாலும் ஒன்றும் கெடுதல் ஏற்படாது.

6—ஆவது அத்தியாயம்.

—:•:—

கிராமச் சங்கங்கள்

ரெய்பெய்ஸன் வகைச் சங்கந்தான் நாட்டுப்புரங்களுக்கு ஏற்ற சங்கம். அது ஏற்கனவே விவரிக்கப் பட்டது. ஆகிலும், இவ்வகைச் சங்கங்கள் இந்தியாவில் அதிகமாய் பரவி இருப்பதால், இச் சங்கங்களின் கொள்கைகளை எடுத்துத் தெளிவாகச் சொல்வது அவசியம். 1904-வருஷத்து X-வது ஆக்டுப்படி ஒரு கிராமச் சங்கத்தின் மெம்பர்களில் ஐந்தில் நாலு பேர்கள் விவசாயிகளாக இருக்கவேண்டி இருந்தது.

புது ஆக்டுப்பிரகாரமும், பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்களின் மெம்பர்கள் பெரும்பாலும் விவசாயிகளாகத்தான் இருக்க வேண்டியதென்று தோன்றுகிறது.

கிராம நாணயச் சங்கங்களின் விசேஷ குணங்களாவன—

1. பொறுப்பு வரையறுக்கப் படாமை.

2. வியவகார எல்லை குறுகி இருத்தல்.

3. பங்குமுதலே இல்லாமலாவது, கூடியமட்டும் குறைந்ததாகவாவது, இருத்தல்.

4. பயன் உண்டு பண்ணும், அல்லது அங்கீகரிக்கப் பட்ட காரியங்களுக்குத் தான் கடன் கொடுத்தல்.

5. கடன் திருப்பிக் கொடுக்க நீண்ட கெடுக்கள்.

6. சம்பளமில்லாத நிர்வாகம்.

7. நிர்வாக சபையாரின் ஜாக்கிரதை.

8. க்ஷேமதனம் வலுவாக இருக்கவேண்டியதின் அவசியம்.

கிராமச் சங்கங்களின் பிரதானக் கொள்கை மெம்பர்களின் பொறுப்புவரையறுக்கப்படாத ஜவாப்புதான். ஒவ்வொரு மெம்பரும் மற்றவர்களுடைய கடனுக்கு பாத்தியப் படுவார். ஒருவர் தான் கொடுக்கவேண்டியகடனை வாய்தாவில் கொடுக்கத்தவறினாலும், அல்லது, கொடுக்க சக்தியில்லாமல் போய்விட்டாலும் அவருக்கு ஜாமீனாயிருப்பவர்கள் அந்தக் கடனுக்கு பாத்தியமாவார்கள்; அவர்களாலும் கடனைத் தீர்க்க முடியாவிட்டால் அந்த பளு மற்ற மெம்பர்களுடைய தாகும்.

பொறுப்புவரையறுக்கப்படாமல் இருப்பதிலுள்ள அபாயம் சொல்லாமலே விளங்கும். மற்ற மெம்பர்கள் கடனுக்காகத் தொடரப்பட்டு எந்த மெம்பருடைய சொத்தும் கட்டுப்படலாம். அப்படியானால் இவ்வகைச் சங்கங்கள் ஏன் இவ்வளவு பிரபலமாய் இருக்கின்றன? ஜனங்கள் ஏன் அவைகளை விரும்புகிறார்கள்? கொஞ்சம் உற்று நோக்கினால் வாஸ்தவத்தில் ஒன்றும் அபாயம் ஏற்படாமலிருக்க வேண்டியமட்டும் பாதுகாப்புச் செய்யப்பட்டிருக்கிறதென்றும், இத்தமாதிரி அபாயத்துக்கு பதிலாக பெரும் சௌகரியங்களிருக்கின்றன என்பதும் விளங்குகிறது.

கிராமத்தில் லேவாதேவி செய்கிறவன் அதிகவட்டி வாங்குகிறான். வியவசாயிகளுக்கு வாய்தாக் காலத்திலும், சாகுபடி காலத்திலும், கல்யாண மாதங்களிலும் கடன் வேண்டும். எல்லா வியவசாயிகளுக்கும் ஒரே சமயத்தில் தான் கடன்வேண்டி இருக்கிறது. வேண்டியகடனும் சுலபமல்ல, சாவுகாரிடத்தில் இவர்களுக்கெல்லாம் வேண்டிய மட்டும் கடன்கொடுக்கப் பணம் கிடையாது. எப்போதும் அருந்தலாயிருக்கும் பொருள்களுக்கு விலை ஏறுவது சகஜம். ஆகையால் பண அருந்தலினால் வட்டிவீதம் உயர்கின்றது. தவிரவும், கிராமத்தில் லேவாதேவி செய்கிறவர்கள் யோக்கியர்களுக்கும் கடன் கொடுக்கிறார்கள், அயோக்கியர்களுக்கும் கொடுக்கிறார்கள். சிலவேளையில் கடன் மூழ்கிப்போகிறது. இந்த நஷ்டங்களுக்கெல்லாம் அவர்கள் ஈடுசெய்து கொள்ள வட்டியை அதிகப்படுத்துகிறார்கள். இத்துடன்கூட இவர்கள் சமயம் கிடைத்துவிட்டால் லாபமடையாமல் விடமாட்டார்களென்பதையும் நாம் கவனிக்கவேண்டும்.

பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்களில் வட்டியை உயர்த்த மேலேசொன்ன காரணங்கள் இல்லை. திவான்பகதூர் ஆர். இராமச்சந்திரராவ் அவர்கள் கல்லியாண நர்க்கத்து ஜனங்களுக்குக் கூட்டுறவின் தத்துவத்தை போதிக்கும்போது பின்வருமாறு சொன்னார்:—

“கல்லியாணநர்க்கத்தில் அளவற்ற திரவியமுள்ள சாவகார் ஒருவர் இருப்பதாய் வைத்துக் கொள்ளுவோம். அவருக்கு கடன் வாங்குகிறவர்களுடைய யோக்கியதையைப்பற்றியும், தமக்கு தொந்திரவு இல்லாமல் கடனைத்திருப்பிக்கொடுக்க உள்ள சக்தியையும் கண்டுபிடிக்க தெய்வதிருஷ்டி இருப்பதாயும் வைத்துக்கொள்ளுவோம். இப்படிப்பட்டவர் தாம் கொடுத்து இருக்கும் பணத்திற்கு திரவிய சாஸ்திரப்படி ஏற்படும் நியாயமான வட்டிக்கு மேல்வாங்க இஷ்டமில்லாதவராய் இருந்தால் அப்படிப்பட்டவரைத் தெய்வானுக்ரகத்தால் கிடைத்தவராய் பாவித்துக் கொண்டாடலாம். ஐக்கிய நாணயச் சங்கம் அப்படிப்பட்ட சாவகாருக்கு ஒப்பாகும்.” இச்சங்கத்தின் சொத்துள்ள மெம்பர்கள் மற்றவர்கள் பணம் கொடுக்கத் தவறிவிட்டால் தாங்களே அதற்காக கஷ்டமடையும்படியாய் நேரிடுமேயென்று பயந்து யோக்கியர்களைத்தான் மெம்பர்களாய்ச் சேர்த்துக் கொள்ளுவார்கள். இச்சங்கத்தில் ஏழையுள்ள யோக்கியர்களும் சொத்துள்ளவர்களும் சேர்ந்திருப்பார்கள். நிலம், வீடு, முதலிய சொத்தைக்காட்டிலும், நாணயத்தையே கடன் கொடுப்பவன் நம்பக்கூடும். ஆகையால் ஒழுங்கானவர்கள் கூடியிருக்கும் இச்சங்கத்தில் யாரும் நம்பிக்கை வைப்பார்கள். இதிலுள்ள மெம்பர்களின்கூட்டு ஜவாப்பின்மேல் கடன்கொடுக்க அநேகர் இஷ்டப்படுவார்கள். பலர் கடன் கொடுக்க இஷ்டப்பட்டால் வட்டி குறையும். இதுமட்

மேல்ல. பொறுப்பு வரையறுக்கப்படாமலிருப்பதால் மெம்பர்கள் சங்கத்தின் வேலையைப் பற்றி கணக்கற்ற கவலை எடுப்பார்கள். ஒவ்வொரு மெம்பரும் எல்லாருடைய பொது நன்மையை கவனிப்பார்; சங்கத்தவர்களெல்லோரும் ஒவ்வொருவருடைய நன்மையைப்பற்றியும் கவனிப்பார்கள். சங்கத்தின் வேலை ஒவ்வொருவரின் பொறுப்புமாகும்.

2. கிராமச் சங்கங்களின் இரண்டாவது கொள்கை என்னவென்றால், வியவகார எல்லை குறுகிக் கட்டாக இருக்கவேண்டுமென்பதுதான். ஏற்கனவே சொல்லியவாறு, ஒரு சங்கம் பலிப்பதற்கு மெம்பர்களுடையவும், பஞ்சாயத்தார்களுடையவும், ஜாக்கிரதையும் கவனமும் விசேஷித்திருக்கவேண்டும். மெம்பர்கள் சமீபத்தில் வசித்தால்தான் ஒருவரால் மற்றொருவருடைய் செய்கைகளைத் தெரிந்துகொள்ளமுடியும். ஆகையால் மெம்பர்களாய்ச் சேர்க்கப் படுபவர்கள் வசிக்குமிடம் குறுகிக் கட்டில் அகப்பட்டிருக்கவேண்டும். இது அத்தியாவசியமென்பது இந்தியாவின் சங்கங்களின் அனுபவத்தில் நன்றாய்த் தெரிந்திருக்கிறது.

1906-07-வருஷத்து வருஷாந்திர ரிபோர்ட்டில் பஞ்சாப் ரிஜிஸ்திரார் அவர்கள் பின்வருமாறு சொல்லி இருக்கிறார்:—

“ஒரு கிராமத்திற்குள்ளேயே வியவகாரம் நடத்தும் சங்கம்தான் வேலை செய்வதிலும் மேலாகிறது; இது அபாயம் இல்லாமலிருக்குமென்று எனக்கு எப்போதும் அபிப்பிராயம். அப்படி யிருந்தால் சங்க நிர்வாகம் செய்வது சுலபமாயுங் குற்றமின்றியும் இருக்கும். நிர்வாக சபையோருக்கு எல்லா மெம்பர்களுடைய வாஸ்தவ நிலைமை முழுதும் தெரியும் தவிரவும் போக்கியதைக்குறைவாய் நடந்துகொள்பவரை கிரா

மத்திலுள்ளவர்கள் எல்லாரும் வெறுப்பார்கள். மேற்சொன்ன காரணங்களால் கடன்கள் முழுகிப்போக அநேகமாய் இடமிராது என்று தோற்றுகிறது. சிரமமில்லாமல் கடன் வாங்கலாம். சந்தேகமில்லாமல் ஜனங்கள் பணத்தை டிபாசிட் செய்வார்கள். ஒரு சுவல்பத் தொகை கடன்வாங்க சாதாரணமாய் இரண்டுமைல் தூரம் போகமாட்டார்கள். இரண்டு மூன்று கிராமங்களில் வியவகாரம் நடத்தும் சங்கங்கள் ஆங்கங்கு வேறுவேறு சங்கங்களாகப் பிரிந்து கொள்ளுமென்று நம்புகிறேன்.

"இப்படிச் செய்வது எளிதாகும்படியாய் நான் சங்கங்களின் உபவிதிகளில் ஒரு ஷரா சேர்த்து இருக்கிறேன். அதாவது, சங்கத்தில் சேர்ந்து இருக்கும் கிராமங்களில் ஒன்று சங்கத்தினின்று நீங்கி தனியாய் ஓர் சங்கம் ஸ்தாபித்துக் கொள்ளலாம். இப்படிப் பிரிவுபட்டு ஏற்படும் சங்கத்துக்குத் தாய்ச் சங்கம் வீதப்படி பங்குத் தொகை, டிபாஸிட்டு, லாபம், இவைகளை கொடுத்துவிடவேண்டும்; புதிதாய் ஏற்படும் சங்கத்திற்கு பழைய சங்கத்தில் மெம்பராய் இருந்தவர்கள் கட்டியிருந்த பணத்தையும் அதற்குத் தக்க லாபத்தின் வீதத்தையும் கொடுக்க வேண்டும். அநேக முதல்தரமான சங்கங்களெல்லாம் ஒரே கிராமத்தில் வியவகாரம் நடத்தும் சங்கங்களாய்த்தான் இருக்கின்றன. எந்தக்கிராமத்தையும் "இது சிறியது, இங்கு சங்கம்வேண்டாம், என்று சொல்லவேண்டியதில்லை." யுனைடெட்பிராவின்ஸ் (ஐக்கியமாகாணம்) ரிஜிஸ்தரார் அவர்களும் சிறு சங்கங்களைத்தான் ஒப்புக்கொள்ளுகிறார். அவர் சொல்லுவதாவது: "சிறு கிராமச் சங்கங்கள் ஏற்படக்கூடியதானால் அவைகள்தான், பெரும் சங்கங்களைக்காட்டிலும் உபயோகமானவை. இச்சங்கங்களில் ஆரம்பத்தில் செய்யவேண்டிய

வேலை அதிகக் கஷ்டமாய் இருக்கலாம். அலுப்பாய்க்கூட இருக்கும். ஆனால் சிற சங்கங்களால் ஜனங்கள் நிச்சயமாய் புத்தியிலும், குணத்திலும் விருத்தியடைவார்கள். மொத்தத்தில் அடையும் லாபமும் ஜாஸ்தியாகவே இருக்கும். ஒரு கிராமத்தில் ஒரு சங்கம் ஏற்பட்டால் உடனே எல்லோரும் அதைக் கவனிப்பார்கள்; கிராம ஏற்பாடுகளில் இதுவும் சீக்கிரத்தில் ஒன்றாகிவிடுகிறது. அந்த இடத்தில் பொறுப்பாய் உள்ளவர்கள் எல்லோரும் அதில் சேர்ந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு இச்சங்கம் தங்களுடையது என்னும் சுதந்திரபாத்தியம் கொண்டாடும்படியாய்த் தோன்றுகிறது. தானும் சங்கத்தில் சேரா அருகனாகவேண்டும் என்னும் எண்ணத்தால் அயோக்கியர்களும் தங்கள் குணத்தைத் திருத்திக் கொள்ளுகிறார்கள்; வரி செலுத்தாதவனும் செலுத்த எண்ணம் கொள்ளுகிறான்."

3. பங்குத்தொகையை கூடியமட்டும் குறைப்பது.—பங்குத்தொகை ஒன்று வைத்துக் கொள்ளுவதால் லாபம் ஒன்றும் இல்லாமல் இருப்பதுடன் கெடுதலாகக்கூட இருக்கும் என்பது ரெய்பெய்ஸன் துரையவர்கள் அபிப்பிராயம். மெம்பர்களுக்கும் பங்கு சுவல்பமாகத்தா னிருக்கும். அவர்கள் சொத்து இதற்குமேல் மிக அதிகமாய் இருக்கிறது. முழுசொத்தும் பாத்தியமாய் இருக்கும்போது பங்குத்தொகையாக சிறு தொகையை வாங்கி வைத்துக் கொள்ளுவதில் என்ன பலன் இருக்கலாம்? ஒன்றுமில்லை. இதுமட்டுமல்ல. நில சாகுபடியில் உபயோகப்படக்கூடிய பணம் அநாவசியமாய் பாங்கில் முடங்கிப் போகிறது. சங்கத்தில் சேரவிரும்புபவர்கள் சிலர் சேர முடியாமல் போய்விடுகிறது; ஈவு கிடைக்கவேண்டுமென்று மெம்பர்களுக்கு ஒரு ஆவலை உண்டுபண்ணுகிறது. விவசாயம் செய்பவனுக்குச் சொத்துக்கு ஒன்றும் குறைவு இல்லை. அவனுக்கு வேண்டியது பணந்தான். ஆகையால்

அவனைப் பங்குக்காகப் பணம் கொடுக்கும்படி கேட்பது அநாவசியமான துன்பத்தை விளைவிக்கிறது. பங்கு கொடுக்கும் மெம்பர்கள் ஈவு கிடைக்குமென்று எதிர் பார்க்கிறார்களென்று சொன்னோம். அது நியாயந்தான். பணத்துக்கு உள்ள வட்டி ஏன் இல்லாமல் போகவேண்டும்? ஈவு கொடுப்பது என்று ஏற்பட்டுவிட்டால் சங்கத்தில் இரண்டு கக்ஷி ஏற்பட்டுப் போய்விடும் என்று மிஸ்டர் வுல்ப் என்பவர் நன்கு விளக்கியிருக்கிறார்; ஏனென்றால், சங்கத்தில் அதிகப் பங்குடையவர்கள் தங்களுக்கு ஈவு அதிகரிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதற்காகக் கடன் வாங்குவோர்களிடத்திலிருந்து அதிக வட்டி வாங்க வேணுமென்று எண்ணம் கொள்ளுகிறார்கள். கடன் வாங்குகிறவர்கள் கருத்து வட்டி குறையவேண்டும் என்பது. கடன் வாங்குபவர்களின் நன்மைக்காகவே சங்கம் ஏற்பட்டது. ஆயினும் கடன் கொடுப்பவர்கள் கையில் அவர்கள் அகப்பட்டுக் கொள்ளுவார்கள். இப்படியாகச் சங்கத்துக்குள் இரண்டு கக்ஷி உண்டாகிறது. ஆகையால் இவ்வகைச் சங்கங்களில் பங்கே வேண்டியதில்லை. ஒருவேளை ஆரம்பத்தில் ஒரு முதல் வேண்டுமென்று எண்ணம் உண்டானாலும் சுவல்பத்தொகை பங்காய்வைத்துக் கொள்ளலாம். இதனால் ஒருவருக்கும் சங்கத்தில் சேரமுடியாமல் இருக்கக்கூடாது. இந்த ராஜதானியிலுள்ள சங்கங்கள், அநேகமாய், 1-ரூபாய் பங்குத்தொகையாய் வைத்துக்கொண்டிருக்கின்றன.

4. கடன்கள் மெம்பர்களுக்குத்தான்; காரியங்களும் பிரயோஜன முள்ளனவாகவேண்டும்.—மெம்பர்களுக்குத் தான் கடன்கொடுக்கலாம் என்பது சொல்லாமலேவிளங்கும். ஐரோப்பிய நாடுகளின் அநுபவத்தைப் பார்த்தால், கடன் கொடுத்த பணத்தை உபயோகிக்கும் காரியங்களைப்பற்றி ஒரு கீர்

ப்பந்தமும் ஏற்படுத்தாமல், வட்டி லாபமாய் இலகுவாகக் கடன்களைக் கொடுப்பது பிழைபோலும். ஏனென்றால், அப்படிச்செய்வதில், கடனாளிகளின் கடன்கள் வரவர ஜாஸ்தி தான் ஆகிறது. லாபகரமான காரியங்களுக்குத்தான் கடன் கொடுக்கப்பட வேண்டியது. முந்தின கடன்களைத் தீர்ப்பதும் இதில் அடங்கியது தான். இந்தியாவில், ஒரு விஷயத்தைப் பார்த்தால், இந்த கண்டிப்பான விதியை அனுசரிப்பதில்லை போலத் தோன்றும்; ஏனென்றால், சடங்குகள் செய்வதற்கும் கடன் கொடுப்பது உண்டு. கவனித்துப் பார்த்தால், இந்த ஏற்பாட்டில் ஒரு பிழையுமில்லை, என்று விளங்கும். கல்யாணங்களுக்காக சங்கங்களில் கொடுக்கப்படும் கடன்கள் ஜாஸ்தியாகிக்கொண்டு வருகிறது, என்பதைக் குறித்து சென்னை கூட்டுறவுச்சங்க ரிஜிஸ்தரார் அவர்கள் 1910–11–ம் வருஷத்திய ரிபோர்ட்டில் பின் வருமாறு சொல்லி இருக்கிறார்:—"மேலுக்கு எப்படித் தோணினாலும், இது ஒரு நல்ல ஏற்பாடு; ஏனென்றால், பெங்கால் ரிஜிஸ்தரார் அவர்கள் ரிபோர்ட்டில் சொல்லியவாறு, மெம்பர்கள் சடங்குகளுக்காகச் செய்யும் செலவுகள்கூட வர வர சங்கத்தின் கட்டுக்குள் அகப்பட்டு விடுகிறது." மிஸ்டர் வூல்பு துரை அவர்களும் இந்த ஏற்பாட்டை ஆமோதித்தே எழுதி இருக்கிறார்—"இந்த ஏற்பாட்டால் மெம்பருக்குப் பணம் மிகுந்தால் அது சம்பாதிக்கப்பட்ட பணம் போலத்தான்; ஏனென்றால் ஒரு காசு மிகுந்தால் ஒருகாசு வந்தது தான்என்று எண்ணப்பட வேண்டும்; மேலும், ஜனங்கள் இதனால் வரவரச் செட்டாகச் செலவு செய்யக் கற்றுக் கொள்ளுவார்கள்." ஆகையால் சங்கங்கள் கடன் கொடுப்பது, லாபத்தை விளைவிக்கத் தக்கதாயும், அதனால் கண்ணியத்தையும் பெருமானத்தையும் ஜாஸ்தி செய்யத்தக்கதாயும், இருக்கவேண்டியது; இந்த கண்ணியத்தை

சங்கத்தார் குறையாமல் வைக்கவேண்டும். எந்தக் காரியங்களுக்காக என்பதை கவனியாமல் கடன் கொடுப்பதில் எவ்வளவு அபாயமிருக்கிறது, என்பது ஈஜிப்ட் தேசத்தில் பாங்குகள் பட்ட அவஸ்தையால் தெரியும். அத்தேசத்தின் அதிகாரிகள் எழுதியிருக்கும் ரிபோர்ட்டிலிருந்து, கூட்டுறவுச் சங்கம் செய்யும் வேலைகளைக் கட்டுக்குள் அடக்க வேண்டியது எவ்வளவு அவசியம், என்பதும் நன்றாக விளங்கும். "வாங்கின கடனைக் கண்டபடி செலவு செய்கிறபடியால், கடன் காரர்கள் தவணைப்படி திருப்பிக் கொடுக்க முடிகிறதில்லை. இதிலிருந்து கூடியமட்டில் கடன்களைப் பயன் கொடுக்கத்தக்க காரியங்களுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று தோற்றுகிறது. வேறொன்றும் இதில் வெளியாகிறது; பாங்கில் கொடுக்கல் வாங்கல் செய்வது இரண்டரை லட்சம் நபர்கள் இருந்தால் ஒவ்வொருவரும் வாங்கும் கடனைச் சரியாக உபயோகிக்கிறார்களா, என்று கவனிப்பது எந்த பாங்குக்குத்தான் முடியும்? 1908-ம் வருஷத்தில் கணக்குப் பார்த்ததில், பாங்கு கொடுத்த கடன்களில் 31,000-ம் நபர்களின் கடன்கள் முழுதும் போய்விட்டன என்று வெளியாயிற்று."

இந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்கள் செய்து கொள்ளும் உபவிதிகளில், எந்த எந்த காரியங்களுக்குத்தான் கடன் கொடுக்கலாம் என்பது தெளிவாய் குறிக்கப்படுகிறது. இதல்லாமல் வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தினால், கடனை உடனே திருப்பிக் கொடுக்கும்படி கட்டாயம் சேரிடும். குறிக்கப்பட்ட காரியங்களுக்கு உபயோகப்படுத்தின பிறகு கடன் தொகையில் ஏதாவது மிஞ்சினால், உடனே அதை சங்கத்துக்கு மெம்பர் திருப்பிக்கொடுத்து விடவேண்டும். எந்தக் காரியங்களுக்கு மட்டும் கடன் கொடுக்கலாம் என்று, சங்கங்

களுக்குப் பொதுவாக ஏற்படுத்தப்பட்டுள்ள "மாதிரி உபவிதிகளின்" (model by-laws) 16-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

5. நீண்ட தவணைக்கடன்களும்—கடன்களின் ஷரத்துக்களும்.—கடன் எந்தத் தொழிலுக்காக உபயோகப் படுத்தப் படுகிறதோ அதில் கிடைக்கும் லாபத்திலிருந்தே கடனைத் திருப்பிக் கொடுக்கும்படியாய் தவணை கொடுக்க வேண்டும். சில்லரை சில்லரையாகக் கடனைத் திருப்பிக் கொடுக்கும்படியாய் நீண்ட கெடுவைத்துக் கொள்ளவேண்டும். ஜர்மனி தேசத்தில் 10-முதல் 20-வருஷம்வரையில் கெடுக் கொடுக்கப் படுகிறது. இந்தியாவில் 5-வருஷங்களுக்கு மேல் கெடு கொடுப்பது வழக்கமில்லை. இது சரிதான். ஏனென்றால் கடன் எதற்காகக் கொடுக்கலாம் என்று ஏற்படுத்திக்கொண்டிருக்கும் நிபந்தனையில் இந்த தேசத்தில் ஜர்மனி அவ்வளவு கண்டிப்புக் கிடையாது. இந்த வித்தியாசம் இந்த தேச ஜனங்களுடைய மதக் கொள்கைகளுக்கும் வழக்கங்களுக்கும் ஏற்ப உண்டாயிருக்கிறது.

கடனைத் திருப்பிக் கொடுக்க கெடு ஏற்படுத்திக் கொள்ளுவதில் நிர்வாக சபையோர் அதிக ஜாக்கிரதை எடுத்துக் கொள்ள வேண்டும். கடன் வாங்குபவர்களுக்கு அசௌகரியம் உண்டாகும்படியாய் அவ்வளவு கடுமையான ஷரத்துக்களும் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது: கடன் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்னும் கவலை உண்டாகாமலிருக்கும்படியாய் இலகுவான ஷரத்துக்களும் கூடாது. சென்னை இராஜதானியில் வேலை செய்துவரும் சங்க இன்ஸ்பெக்டர்களுக்கு ரிஜிஸ்தாரவர்கள் கொடுத்திருக்கும் உத்திரவு இதை நன்றாய் விளக்குகிறது. "கடன் திருப்பிக்கொடுக்க கெடு நன்றாய்

யோஜித்து ஏற்படுத்த வேண்டும். ஒரு வேளை கடன் வாங்கியிருக்கும் பணம் செலவான வருஷத்திலேயே ஈடாகிவிடலாம்; உதாரணம்:—நிலம் சாகுபடி செய்ய விதைவாங்கினால் அதே வருஷத்தில் பணம் ஈடாகிவிடும். இப்படிப்பட்ட காரணங்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த வருஷத்திலேயே சௌகரியமானபோது திருப்பிக் கொடுத்து விடும்படியாய் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சில செலவுகளுக்காகக் கடன் வாங்கப்பட்டிருந்தால் ஒரு வருஷத்தில் பணம் ஈடாகாது. அப்படியானால் பணம் திருப்பிக்கொடுக்க ஒருவருஷம் கெடுவாக முதலில் வைத்துக்கொண்டு பிறகு தவணைகள் கொடுத்துக்கொண்டு வரலாம். உபவிதிகளால் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் ஒன்றும் பிசகாவிட்டால்தான் மறுதவணை கொடுக்கலாம். தவிரவும் மெம்பரும் யோக்கியனாகவே இருக்கிறான் என்பதையும் கவனிக்க வேண்டும்."

கூட்டுறவுச் சங்கங்கள் கடனை சில்லரையில் தீர்க்க இடங் கொடுக்கும்; ஆனால் தவணை தப்பாது பணம் வசூலாகிவிட வேண்டும். அதி விசேஷமான காரணங்களுக்காகத்தான் மறுதவணை கொடுக்கலாம்.

6. கொடுக்கிற கடன்களுக்குத் தகுந்த ஜாமீன் இருக்கவேண்டும். வட்டி விதம் கொடுக்கிற ஜாமீனைப் பொறுத்திருக்கிறது. கூட்டுறவு முறைகளின் படியும் நபர் ஜாமீனைவிட சிலாக்கியமானது வேறு இல்லை. ஈடாக வைப்பதற்கு ஒரு மெம்பருக்கு வீடு இருக்க வேண்டாம், பூஸ்திதி இருக்கவேண்டாம்; ஸமர்த்தன், யோக்கியன் என்கிற கீர்த்தி போதும். அசையாப் பொருள் அடமானத்தைவிட நபர்ஜாமீன் விசேஷம் என்பதற்கு வேறு ஒரு காரணமுமுண்டு. பந்தகக் கடன்களில் விசேஷமாக வியாஜ்யத்திற்கு இடமுண்டு.

சங்கங்களில் நபர் ஜாமீன் ஒன்று அல்லது இரண்டு பேர்கள் வேண்டும். இவர்களும் சங்கத்தின் மெம்பர்களாகவே இருக்கவேண்டியது.

சொத்து எவ்வளவு இருந்தாலும்சரி ஒரு மெம்பர் ஜாமீன் நிற்கக்கூடிய தொகை இவ்வளவுதான் என்று உபவிதிகள் நிபந்தனை ஏற்படுத்துகின்றன. இரண்டு மூன்று மெம்பர்கள் ஒருவனுக்கு ஜாமீன்நிற்கத் தயாராய் இருந்தால் அவன் நம்பத் தகுந்தவன் என்பது அதனாலேயே விளங்கும்.

ரிஜிஸ்தரார் அவர்களுடைய அனுமதியின்றி ஜங்கம சொத்து ஜாமீன்பேரில் சங்கங்கள் கடன்கொடுக்க சட்டம் இடங்கொடுக்காது. கூட்டுறவினர் சங்கமுறை என்னவென்றால் ஏழைகளுக்கும் பணம் உள்ளவர்களுக்கும் கடன் கொடுபட்ட பின்புதான் பிரபுக்களுக்கு கடன்கொடுக்க வேண்டுமென்பது.

7. வேகுமான மில்லாமல் சங்க நிர்வாகம் செய்தல்.—இந்தச் சங்கங்களின் நிர்வாகச் செலவு மிகக் குறைவாயிருக்க வேண்டும். சங்கங்கள் வைக்கும் கணக்குகள் செடுக்கில்லாமல் இருக்கவேண்டும். அவைகளை எழுத சாதாரணமாய் ஒரு போஸ்டுமாஸ்டர், கர்ணம் அல்லது கிராமாந்திர பள்ளிக்கூட உபாத்தியாயர் அகப்படுவார். வேறுவழி இல்லாவிட்டால் கணக்கெழுத காரியதரிசி அல்லது வேறு பஞ்சாயத்து மெம்பருக்கு கொஞ்சம் வெகுமானம் கொடுக்கலாம். இந்தச் சிறுதொகை கூட ரிஜிஸ்தரார் அவர்கள் கணக்கைப் பரிசோதனை செய்து, கணக்குகள் சரிவரவைக்கப்பட்டன என்று அபிப்பிராயம் கொடுத்த பிறகுதான் கொடுக்கலாமென்று கிராமச் சங்கங்கள் நிபந்தனை ஏற்படுத்திக் கொள்ளுகின்றன. பஞ்சாயத்து மெம்பர்கள் பிரதிப் பிரயோசனமொன்றும் இல்லாமல் வேலை

செய்ய வேண்டும் என்பதுதான் கொள்கை. ஆனால் சங்கத்தின் காரியங்களின் பொருட்டு நேரிடும் செலவுகளை சங்கக் கணக்குகளில் காட்டி செலவிடலாம்.

மகாசபையோர் தீர்மானங்களுக்கு உட்பட்டு, சங்கத்தின் நிர்வாகம் வழக்கமாய் 5-மெம்பர்களுக்கு அதிகப்படாத பஞ்சாயத்தாரைச் சேர்ந்தது. "பஞ்சாயத்தார் தமக்குள் ஒருவரை அக்கிராசனாதிபதியாகவும், ஒருவரைக் காரியதரிசியாகவும், மற்றொருவரை கஜான்ஜியாகவும் நியமித்துக் கொள்ளுகிறார்கள். "காரியதரிசியை நியமித்தே தீரவேண்டும்; சில சங்கங்களில் அக்கிராசனாதிபதியாவது, கஜான்ஜியாவது, அல்லது இரண்டு பேருமாவது இல்லாமல் இருக்கலாம். காரியதரிசி மகாசபையோரின் அபிப்பிராயத்தையும் பஞ்சாயத்தார் அபிப்பிராயத்தையும் நிறைவேற்றுகிறார். நிர்வாக வேலை அவர்தான் செய்து வரவேண்டும். சங்கத்தில் சேர விரும்புகிறவர்களின் பிரவேச விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளுவதும், நிர்வாக சபையோர் முன்பும், மஹாசபையோர் முன்பும் விஷயங்களைக்கொண்டு வருவதும், பஞ்சாயத்தார் கொடுக்கும்படி உத்தரவு கொடுத்திருக்கும் கடன்களைக்கொடுப்பதும் இன்னும் சங்கம் நடத்துவதற்காகச் செய்யவேண்டிய மற்ற காரியங்களைச்செய்வதும், இவைகளெல்லாம் காரியதரிசியின் வேலை. சங்கம் பிரபலிப்பது நிர்வாக சபையோரின் சாமர்த்தியத்தையும் ஜாக்கிரதையையும் பொறுத்தது. பஞ்சாயத்து மெம்பர்கள் அடிக்கடி கூடவேண்டும். தகுந்த ஜாமீன் இல்லாமல் கடன் கொடுக்கக் கூடாது. உபவிதிகளில் ஒப்புக் கொள்ளப்பட்ட காரணத்துக்கு கடன் கொடுக்கலாம். தவணைகடந்த கடன்கள் உடனுக்குடனே வசூல் செய்யப்பட வேண்டும். கணக்குகள் சாமானியமானவைகளாய் இருந்தால் போதும். ஆனால் இடைவிடாது ஒழுங்காய் வைக்கப்பட்டிருப்பது அவசியம்.

க்ஷேமநிதி—சங்கங்கள் கடன் வாங்குகிற இடத்தில் என்ன வட்டி கொடுக்கிறதோ, அதைவிட கொஞ்சம் ஜாஸ்தியான வட்டிக்கு மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கின்றன. சென்னை ராஜதானியின் சங்கங்களுக்கு, செண்ட்ரல் பாங்கிகளிலிருந்து அரையே அரைக்கால் வட்டிக்குக் கடன் கிடைக்கிறது. மெம்பர்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு முக்காலே அரை வீசம் வீதம் வட்டி போடப்படுகிறது. இந்த இரண்டு வட்டி விகிதத்துக்கும் உள்ள வித்தியாசம்தான் சங்கத்துக்கு லாபமாகும். சங்க நிர்வாகச் செலவு போக பாக்கி முழுதும், நஷ்டம் உண்டானால் ஈடுசெய்ய வைத்திருக்கும் க்ஷேமநிதியுடன் சேர்க்கப்படுகிறது. ஸர்க்கார் உத்திரவு இல்லாமல் லாபத்தைப் பிரித்து எடுத்துக்கொள்ளக் கூடாது. லாபத்தில் நாலில் ஒன்று க்ஷேமநிதியில் சேர்த்த பிறகு பாக்கியில் 100-த்துக்கு 10-க்கு மேற்படாமல் தர்ம காரியங்களுக்கு செலவிடலாம். க்ஷேமநிதியைப் பிரிக்கக் கூடாது. இது சங்கத்தினுடைய பொது சொத்து, க்ஷேமநிதி பெருத்தவுடன், அதைப் பிரித்தெடுத்துக் கொள்ள சங்கத்தை கலைத்துவிட வேண்டுமென்று சில மெம்பர்களுக்கு எண்ணமுண்டாகிறதென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால், சமீப காலத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சங்கங்களின் உபவிதிகளில் பின்வரும் நிபந்தனை சேர்க்கப்பட்டிருக்கிறது:—"சங்கத்தை முடிவு கட்டின காலத்துக்கும், க்ஷேமநிதியை மெம்பர்கள் பங்கிட்டு எடுத்துக்கொள்ளக் கூடாது. மகா சபையார் யுக்தப் பிரகாரம் ஒருபொது நன்மையான காரியத்துக்கு உபயோகப் படுத்த வேண்டும். எந்த மெம்பரும் இதில் ஒரு பாகத்தைப் பிரித்துக் கொடுக்கும்படி கேட்க முடியாது. ஆகையால், மற்ற ஐக்கியபந்தங்கள் எல்லாம் தளர்ந்து போனபோதிலும், இந்த நிதி மெம்

பர்களைக் கலைத்து விடாமல் சேர்த்துவைக்க, ஒரு பந்தமாகி றது. ஏனென்றால், தான் விலகிவிட்டால் தானே வளர்க்க உழைத்த நிதியின் பயனைத் தான் அடையாமல் போகவேண் டுமே என்று ஒவ்வொருவரும் எண்ணுரோ?

க்ஷேமநிதி விருத்தியாவதில் சங்கத்துக்கு என்ன உப யோகம்? முதலாவது, க்ஷேமநிதியிருந்தால் ஒரு சங்கத்தின் மதிப்பும் கண்ணியமும் ஜாஸ்தியாகும்—இதுவே மெம்பர்க ளுக்குப் பெருமையை விளைவிக்கும். இதுமாத்திரம் அல்ல. அச்சங்கத்துக்கு வேண்டுமானுல் கடன் கொடுக்க நான் நான் என்று வருவார்கள். சரலமான வட்டிக்குக் கடன் கிடைக் கும். க்ஷேமநிதி பெரிதாக இருந்தால், அச்சங்கத்தின் க்ஷே மம் வரவர விருத்தி யடைவதில் தடையேயிராது.

சங்கங்களின் க்ஷேமநிதிகளைப் பெரும்பாலும் ஸெண்ட் ரல் பாங்கில் போடுவது வழக்கம். அப்படிச் செய்வதின் கருத்து என்னவென்றால், அவைகளை நஷ்டமேறது இல்லாத இடங்களில் வட்டிக்குப் போடவேண்டும் என்பதுதான். சில ஐரோப்பிய தேசங்களில் க்ஷேமநிதியை மூலதனத்துடன் கலந்து மெம்பர்களுக்குக் கடன் கொடுப்பது வழக்கம்.

கிராமச் சங்கங்களின் உபவிதிகள்:—ஒவ்வொரு கூட் டுறவுச் சங்கமும் ஏற்ற உபவிதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கிராமச்சங்கங்களின் உபவிதிகள் இந்த அதி காரத்தில் சொல்லியிருக்கும் கொள்கைகளை ஒட்டி அமைக் கப்படுகின்றன. இந்த ராஜதானி கவர்ன்மெண்டார் இவ் விஷயமாய் செய்திருக்கும் உத்திரவுப்படி, உபவிதிகள் ஏற்ப டுத்தப் படவேண்டும். கவர்ன்மெண்டார் உத்திரவுகளுக்கு "ரூல்கள்" என்று பெயர்.

கிராமரணயச் சங்கங்கள் பின் வரும் விஷயங்களைப் பற்றி உபவிதிகள் ஏற்படுத்திக் கொள்ளுகின்றன:—

1. சங்கத்தின் பெயரும், வியவகார க்ஷேத்திரமும் (சாதாரணமாய் ஒரு கிராமத்தில்தான் வியவகாரம் நடக்கும்).

2. சங்கத்தின் நோக்கங்கள் (மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கும்பொருட்டுப் பணம் கடன் வாங்குதலும், மெம்பர்களுக்குள் சிக்கனம், சுய உதவி, கூட்டுறவு, இவைகளை விருத்திசெய்தலும், இவைகள் சங்கங்களின் நோக்கம்)

3. சங்கத்தின் கடன்களுக்கு மெம்பர்களுக்குள்ள பொறுப்பு (வரை அறுக்கப்படாதது).

4. சங்கத்தின் மூல திரவியமும், ஒவ்வொரு மெம்பரும் எவ்வளவு பங்கெடுத்துக் கொள்ளலாம் என்பதும்.

5. சங்கத்தில் யார் சேரலாம் என்பதும்; யார் சேர்த்துக் கொள்ளும் அதிகாரி என்பதும்.

6. சங்கத்தினின்று எப்போது விலகலாம்.

7. சங்கத்தினின்று விலகியவர்களுக்கு 2-வருஷம் பொறுப்பு நிற்கும்; இறந்துபோன மெம்பர்கள் பொறுப்பு 1-வருஷம் நிற்கும்.

8. சங்கம் கடன்படக்கூடிய அளவு.

9. என்ன காரியங்களுக்காகக் கடன் கொடுக்கலாம் (வழக்கமாய் 12 ஒப்புக்கொள்ளப்பட்ட உபயோகமான காரியங்களுக்குத்தான் கடன்கொடுக்கலாம் என்று நிபந்தனை ஏற்படுகிறது); கடன் திருப்பிக் கொடுக்கும் ஷரத்துகள்; கடன்கள் என்ன ஆதாரத்தின்மேல் கொடுக்கலாம்; வட்டிவிகிதம்: கடன் வசூலிக்கும் வழி.

10. லாபத்தின் விநியோகம்,

11. சங்க நிர்வாகம்; பஞ்சாயத்தார், காரியதரிசி, அக்கிராசனாதிபதி, இவர்கள் அதிகாரம்.

12. மஹா சபையோர் தீர்மானம் செய்யவேண்டிய விஷயங்கள். மஹா சபையோரின் அதிகாரம்; ரிஜிஸ்தார் அனுமதியுடன் சங்க உபவிதிகளைத் திருத்துவது.

13. ரிஜிஸ்தாரர் அவர்களுக்கு அனுப்ப வேண்டிய கணக்குகள்.

7-ஆவது அத்தியாயம்.

சங்கங்களுக்குப் பணம் சேகரிப்பதும்; சங்கங்களை மேல் விசாரணை செய்தலும்.

சங்கங்களுக்குப் பணம் சேகரித்துக் கொடுப்பதும், அவைகளின் வியவகாரங்களை மேல்விசாரணை செய்வதும், இவ்விரண்டுந்தான் சங்கங்களுக்கு முக்கிய கவலை.

பணம்சேகரித்தல்.—ஒரு சங்கத்திற்கு, முதல், அடியிற் கண்ட வழிகளால் கிடைக்கிறது.—

i. ஏற்கனவே செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்.

ii. பலவகைக் கட்டணங்கள்.

iii. டிபாஸிட்டுத் தொகைகள்.

iv. வேறு கடன்கள்

i. பங்கு மூலதனம்.—அநேக சங்கங்களில் செலுத்தி விடப்பட்ட பங்கு மூலதனமே கிடையாது. பிரவேசக் கட்டணங்கள் மட்டும் வசூல் செய்யப்படுகின்றன. சில சங்கங்களில், பங்கு ஒன்றுக்கு, ஒரு ரூபாய்முதல் 5-ரூபாய்வரையில் கட்டவேண்டியிருக்கிறது. ஏழைகளுக்குப் உபயோகப் படுவதே கூட்டுத்தொழிற் சங்கங்களின் நோக்கமானதால் பங்குத் தொகை சிறியதாக வைக்கப்படுகிறது. ஆனால் பங்குத்தொகை கொஞ்சமாவது இருப்பது அவசியம்; அப்படி இருப்பதால் மெம்பர்களுக்கு தங்களுக்கு பாங்கின் வியவகாரத்தில் சம்பந்தம் உண்டென்பது, மனதில் எப்போதும் இருக்கும். ஒவ்வொருவரும் தமக்கு பாங்கில் ஒரு பாத்தியம் உண்டு என்று நினைப்பார்.

ii. பலவகைக் கட்டணங்கள்.—இவைகளாவன:—பிரவேசக்கட்டணம், அபராதங்கள், கெடுவுகடந்த கடன்களுக்கு அபராத வட்டி.

iii டிபாசிட்டுகள்.—பலவிதமாகவும் யோசித்துப் பார்த்தால் டிபாசிட்டு மூலமாய் சங்கத்துமுதல் ஏற்படுவதுதான் முக்கியம். முதலாவது, டிபாசிட்டுக் கிடைப்பது ஊரில் பணம் உடையவர்கள் சங்கம் சரியாய் வேலைசெய்கிறது என்று நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டும். அவர்களுக்கு தொழில்முறை தெரியும்; சூக்ஷிமபுத்தியுண்டு: அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுப் பணத்தை டிபாசிட்டு வைத்தால் சங்கம் ஒழுங்கானவழியில் வேலைசெய்கிறது என்பதைப்பற்றி சந்தேகமே இல்லை.

கடனிலிருந்து மெம்பர்களை நிவர்த்திசெய்ய வேண்டுமென்பதற்கு அடுத்தபடியாய், சிக்கனத்தை விருத்திசெய்து மேலுக்குமேல் கொஞ்சம் கொஞ்சமாவது பணத்தை

மிகுத்துவைக்கும் வழக்கத்தை உண்டுபண்ணுவதுதான் பெரிது. ஒவ்வொரு மெம்பரும் தான் மிகுத்துவைக்கும் பணம் சிறு தொகைகளானாலும் பெருந் தொகைகளானாலும் சங்கத்திலேயே கட்டிவைக்கவேண்டும்; சங்கமும் மெம்பர்கள் பணம் கட்டிவைக்க வேண்டிய சௌகரியங்களைச் செய்துவைக்க வேண்டும். டிபாஸிட்டுக்கள் 4 அணா, 8 அணா ஆனாலும் வாங்கிக்கொள்ளப்பட வேண்டும். தவிரவும் டிபாஸிட்டு வைப்பதால் மெம்பர்களுக்கு சங்க நிர்வாகத்தில் அக்கறை உண்டாகிறது: அதனால் சங்கமும் பலப்படுகிறது: அதன் உபயோகமும் அதிகரிக்கிறது.

டிபாஸிட்டுக் கட்டிவைக்கும் ஒவ்வொருவரும் பஞ்சாயத்தார்களைக் கவனித்துவரும் ஒருவித போலீசைப்போல் ஆகிறார்கள். ஏனென்றால் தங்கள் பணம் சங்கத்தில் இருப்பதால் சங்கத்தின் வியவகாரத்தை யெல்லாம் ஊன்றிப் பார்க்கின்றனர்: சுயகாரிய மாகையால் மனஸ்பூரணமாய் கவனம்வைக்கின்றனர். எவ்வளவு சம்பளக்காரர்களை வைத்துக் கவனித்தாலும் அவர்களால் இவ்வளவு பார்க்க முடியாது.

டிபாஸிட்டு வைக்கும் ஏற்பாட்டால், புதைத்து வைத்து இருக்கும் பணம் உபயோகத்துக்கு வருகிறது. பணத்தைப் புதைத்து வைத்திருந்தவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமான உத்தியோகஸ்தர்களிடம் வந்து புதைத்து வைத்து இருக்கும் பணத்தை எடுத்து சங்கத்தில் வைப்பது உசிதமா என்று அபிப்பிராயம் கேட்டு இருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இந்த உத்தியோகஸ்தர்கள் சொல்லுவதைக் கேட்ட உடன் சந்தேகமில்லாமல் பணத்தைக்கொண்டு வந்து சங்கத்தில் கட்டுகிறார்களாம்.

V. இதர கடன்கள்.— மெம்பர்களிடத்திலிருந்தும், மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்தும், ஆக்டுப்படி ரிஜிஸ்

தக் செய்யப்பட்ட மற்ற சங்கங்களிடத்திலிருந்தும் பாங்குகளிடத்திலிருந்தும் கடன் வாங்கலாம்.

இதரக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்கப்படும் கடன்கள்தான் கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கு மிக ஒத்திருக்கும். மற்றச் சங்கங்களுக்குப் பணம் சேகரித்துக் கொடுப்பதற்கென்றே சில சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு சென்ட்ரல் பாங்கு என்று பெயர். முறைப்படி பார்த்தால் சங்கங்களே மெம்பர்களாய்ச் சேர்ந்து இந்த மாதிரி பாங்கை அமைத்துக்கொள்ள வேண்டும். இம்முறையில் பாங்கு ஒன்று மதுரையில் சமீபத்தில் ஏற்பட்டது.

பணக்காரர்களிடமிருந்து சங்கங்களுக்குப் பணம்செல்ல சென்ட்ரல் பாங்கு இலகுவான வழி. புதிதாய் அமைக்கப்பட்ட ஒரு கிராமச்சங்கத்தைவிட, சென்னையில் அல்லது திருச்சியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சென்ட்ரல் பாங்குகளைப்போலிருக்கிறவைகளுக்குக் கடன் இலகுவாகக் கிடைக்கும். அதற்கு அனேக காரணங்கள் உண்டு. சென்ட்ரல் பாங்கு இருக்கும் இடம் ஒரு பெரிய நகரமாக இருக்கும். அதில் தனவான்கள் கணக்கில்லாமல் இருப்பார்கள். ஒரு கிராமச்சங்கம், ஏழைகளும் கடன் பட்டவர்களும் மிகுதியாயுள்ள ஊரில், ஏற்படுகிறது. தவிரவும், ஒரு பெரிய பாங்கை நடத்தும் சிப்பந்திகளும் உத்தியோகஸ்தர்களும் தொழில் நடத்துவதில் தேர்ச்சி யடைந்தவர்களாகவே இருப்பார்கள். புதிதாய் ஏற்படுத்தப்பட்ட சிறிய கிராமத்திலோ, நிர்வாக சபையாருக்கும் சிப்பந்திகளுக்கும் தொழில் பெரும்பாலும் புதிதாய்க் கற்றுக்கொள்ளவேண்டியதாக இருக்கும். ஆதலால், பணமுள்ளவர்களிடத்திலிருந்து எளிதாகக் கடன் வாங்கி, கிராமச் சங்கங்களுக்கு, வேண்டியபோது சிறிய சிறிய

[illegible]ரைகள்போல் கடன் கொடுப்பதற்கு ஏற்ற ஒருவழி என்றே, சென்ட்ரல் பாங்குகள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

இந்தராஜதானியில், சென்னையில் ஒரு சென்ட்ரல் பாங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது இந்த ராஜதானியில் உள்ள எந்தச் சங்கத்துக்கு வேண்டுமென்றாலும் கடன் கொடுக்கும். இதைத்தவிர, ஐந்து ஜில்லாக்களில் ஐந்து சென்ட்ரல் பாங்குகள் இருக்கின்றன. அந்த அந்த ஜில்லாக்களிலுள்ள சங்கங்களுக்கு அவைகள் கடன் கொடுக்கின்றன. சென்ட்ரல் பாங்கிகள் கடன்கொடுப்பது மாத்திரம் தான். சேர்ந்த சங்கங்களின் வேலைகளை மேற்பார்வை பார்க்கிறதில்லை.

சங்கநிர்வாகம்.—ஐரோப்பா தேசத்தில் சங்கங்கள் ஒன்றுடன் ஒன்றுசேர்ந்து துணைச் சங்கங்களாய் (unions) செய்துகொண்டு தமக்குள்ளேயே மேல்விசாரணை செய்துகொள்ளுகின்றன. ஒன்றுக்கொன்று உதவி செய்கிறது. ஒவ்வொரு சங்கமும் கணக்குப் பரிசோதனைசெய்ய ஒரு உத்தியோகஸ்தரை தனிமையாய் நியமித்துக் கொள்ளுவது சாத்தியப்படாது. சங்கங்கள் சில ஒன்றுசேர்ந்து பொதுச் செலவில் ஒரு உத்தியோகஸ்தரை நியமித்துக் கொள்ளலாம். ஐர்லாண்டு தேசத்தில் இருப்பதுபோல் சங்கநிர்வாக சபையொன்று ஏற்பட்டால் அத்துடன் மற்றச் சங்கங்களெல்லாம் சேர்ந்து கொள்ளலாம். இதை உடன்சேர்ந்த சங்கங்களே நடத்தும். இந்த நிர்வாகசங்கம் மற்றச் சங்கங்களின் கணக்குப் பரிசோதனையை நடத்துவிக்கலாம். இப்போது இந்த ராஜதானியிலுள்ள சங்கங்கள் முழுவதையும் அணைக்க இம்மாதிரிச் சங்கம் ஒன்றும் இல்லை. யூனியன்கள்தான் ஏற்பட்டு வருகின்றன. இவைகள் ஒரு பரிசோதகரை நியமித்துக்கொண்டு, அணைக்கப்பட்ட சங்கங்களைக் கணக்குப் பரிசோதனை செய்

கின்றன. யூனியனைச் சேர்ந்த சங்கங்களின் பிரதிநிதிகளாலமைக்கப்பட்ட சபை ஒன்று யூனியனுடைய விவகாரத்தை நிர்வகிக்கிறது. இந்தச் சபை அடிக்கடி கூடுகிறது. உடன் சேர்ந்த சங்கங்களுக்குக் கடன் பொர்சசெய்கிறது. சென்ட்ரல் பாங்குகள், யூனியன்களால் பொர்க செய்யப்பட்டு கொடுபட்ட கடன்களின் வட்டியில் ஒரு வீதம், யூனியன்களுக்கு கொடுக்கிறது. இந்த வரும்படி யூனியன் நிர்வாகச் செலவில் உபயோகப்படுகிறது.

இன்னும் யூனியனுடன் சேராத சங்கங்கள் பல இருக்கின்றன. இப்போது கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் தான் சங்கங்களின் கணக்குகளைப் பரிசீலனை செய்கின்றனர். அநேகம் யூனியன்கள் ஏற்படும் வரையில் அவர்கள் மேல்விசாரணையை நிறுத்தமுடியாது. சங்கங்கள் வேலையை மேல்விசாரணை செய்வதற்க ஏற்பாடு நடந்து முடிந்து விட்டதாய் இன்னும் சொல்ல முடியாது.

8-ஆவது அத்தியாயம்.

பிரிவினைச் சங்கங்கள்.

ராச்டேல் வழிகாட்டிகள்:—1843-ம் வருஷக் கடைசியில், இங்கிலாந்தில், சிலவிடங்களில் சேவிங்க்ஸ்பாங்குகள் முழுகிப்போய், பல குடும்பங்களுக்கு தரித்திரம் வந்துவிட்டது. அப்போது நவம்பர்மாதம் ஒருநாள் சாயங்காலத்தில், மான்செஸ்டருக்கருகில் இருக்கிற ராச்டேல் என்னும் ஊரில் சில கம்பளி நெசவுகாரர்கள், சோற்றுக்கு வழியில்லாமலும், பிழைப்புக்கு வழியறியாமலும், உள்ளம் சோர்வடைந்து, ஒரு

கூட்டம் கூடி, என்ன செய்தால் தங்களுடைய சுவல்ப சம்பாத்தியத்தைக் கொண்டு வாழ்நாள் கழிக்கலாமென்று ஆலோசனை செய்யலானார்கள். அப்போது இவர்களுக்கு ஒரு வழி தோன்றிற்று. தாங்கள் சிறிய முதல் சேர்த்துக்கொண்டு ஒரு கடை அல்லது ஸ்டோர் (store) வைத்தால் வேண்டிய சாக்குகள் அதிலேயே வாங்கிக் கொள்ளலாம். சரக்குகளும் சுத்தமாயிருக்கும், விலையும் சரசமாகும், என்று எண்ணினார்கள். உற்பத்தி செய்கிறவர்களிடத்தில் மொத்தமாய் வாங்கி சில்லரையாய் விற்கும் வியாபாரிகளின் லாபமும் இவர்களையே சேருமல்லவா? இம்மாதிரி ஆலோசித்து, வாரத்துக்கு தலைக்கு இரண்டுபென்சு (பென்சு ஒரு அணாவுக்குச் சமம்) சந்தா செலுத்தி வந்தார்கள். சீக்கிரத்தில் 28 நபர்கள் சேர்ந்தனர்: சங்கத்தொகையும் 28 பவுனளவுக்குப் பெருகிற்று.

1844-ம் வருஷம் டிஸம்பர் மீ 21உ வியாபாரம் ஆரம்பித்தது. சாக்குகள் மொத்தமாக வாங்கி அக்கம்பக்கத்தின் விலைப்படி விற்பதுதான் முக்கியக்கருத்து. இவர்களுடைய வியாபார முறைகள் சில சொல்லத்தகுந்தவைகள். (1) ராஜாங்க விஷயமாயும், மதவிஷயமாயும், மெம்பர்கள் கொள்கைகளைப்பற்றி சங்கம் ஒன்றும் கேட்காது; (2) வேண்டிய முதலை தங்களுக்குள்ளேயே சேகரித்துக் கொள்ளவேண்டும்; (3) மெம்பர்களுக்கு விற்கும் சாக்குகள் சுத்தமாக இருக்கவேண்டும்; (4) அக்கம்பக்கத்துக்கு நிறை, அளவு, விலை, சரியாய் கொடுக்கவேண்டும்; (5) லாபத்தை ஒவ்வொரு மெம்பரும் வருஷத்தோறும் வாங்கின சாமான்களின் கூடுதல் கிரயத்தொகைப் பிரகாரம் தாமாஷாப்போட்டு விகித்துக்கொள்ளவேண்டியது; (6) லாபத்தில் ஒரு பாகத்தை வித்தியாவிஷயமாக உபயோகிக்க வேண்டியது; (7) வியாபாரத்தை நடத்த ஒரு நிர்வாக சபை ஏற்பாடு செய்து, வோட்டுக் கொடுக்

றையில், "நமக்கு ஒரு வோட்டுத்தான்" என்கிற முறையை அனுஷ்டிப்பது, அவசியம்; (8) அடிக்கடி வரவு செலவு இலே ஜிக்கணக்குகளைப் பிரசுரம் செய்வதும் இன்றியமையாதது.

மேற்சொல்லிய முறைகளை "ராச்டேல்" முறையென்றும், அவைகளில் ஏதாகிலும் மாறுதலிருந்தால் பிரிடிஷ் கூட்டுறவு விஷயத்தில் சேரக்கூடாதென்றும், இங்கிலாத்தில் அபிப்பிராயம்.

இதன் முறை. வீட்டு யோசக்ஷேமத்துக்கு வேண்டிய சாமான்கள் நம்முடைய கைக்கு வந்துசேருவதற்குள் மத்தியில் பலகைகள் மாறுகின்றன. வேண்டிய சரக்குகளை மொத்தமாய் நயமான விலையில் வரவழைக்க, ஒருகுடித்தனக்காரனுக்கு முடியாது. அப்படி மொத்தமாக வருத்த வேண்டிய முதலும் சாமர்த்தியமும் வர்த்தகனுக்குத்தான் அமைந்திருக்கிறது. அதனால்தான் அவன் மலிவிலையில் ஏராளமாக வரவழைத்து சாமான்களை சில்லரையில் தள்ளுகிறான். சாமர்த்தியத்தாலும், வேண்டிய முதல் இருப்பதாலும், வியாபாரி ஏராளமான லாபத்தை அடைகிறான். வியாபாரியானதால், சாமான்களுக்கு கூடியமட்டும் ஜாஸ்தியிலே வாங்குகிறான்; இது போகட்டும் என்றாலும், மேலுக்குமேல் லாபத்தை யடைய, சுத்தமான சரக்குகளுடன் மட்டமான சாமான்களைக்கலந்து விற்பது சாதாரணமாய் நாம்கண்டதில்லையா? நம்தேசத்தில் நகர்களில் உள்ள, கடைவீதியைப்பார்த்தால், போதாதா? வர்த்தகர்களிருப்பதனால் உண்டாகும் இம்மாதிரியான கெடுதிகளை விலக்கும் பொருட்டே "கோவாப்பரேடிவ் ஸ்டோர்கள்" ஏற்படுத்தப் பட்டு வருகின்றன. இவைகளின் அலுவல் என்னவென்றால், சாதாரணமாய் வீட்டில் உபயோகப்படும் சாமான்களை கலப்பின்றி மொத்தமாக வரவழைத்து மெம்பருக்குச் சில்லரையாக விற்பதுதான்.

ஒரேவீட்டில் பலர் கூட்டுக்குடித்தனம் செய்தால் செலவு குறையும். ஆனால் மனதுக்கு ருசிக்காத சிலவிஷயங்கள் சம்பவிக்கும். கூட்டுப்பண்டகசாலைகளில் இம்மாதிரி அசௌகரியங்களில்லாமல் முதல்சொல்லியபடி செலவுமாத்திரம் குறையும். இங்கிலாந்தில் சில ஸ்டோர்கள் சரக்குகள் விற்பதுடன் சரக்குகளை செய்வதும் உண்டு; ஆனால் தங்களிடத்தில் வாங்குகிறவர்களுடைய நன்மையைமட்டும் கவனித்து, தங்களுடைய வேலைக்காரர்களை, மற்றமுதலாளிகள்போல் நடத்தாது நயமாய் இருக்கும்வரையில் இந்தஸ்டோர்களுக்கு "பிரொடக்டிவ் சொஸைடி" (உற்பத்திச் சங்கம்) என்கிறபெயர் தகாது.

பலவிதமான ஸ்டோர்கள்.—எல்லா ஸ்டோர்களும் இந்த ராச்டேல் முறையை அனுசரிக்கிறதில்லை. சில, கடை விலையை கவனிக்காமல், கூடியமட்டும் குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்றன; சில, கடனுக்கு விற்பதும் உண்டு. இன்னும் சில தாங்களே வாங்கி விற்காமல் அந்தந்த இடங்களில் ஏற்கனவே இருக்கும் கடைக்காரர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டு தங்களுடைய மெம்பர்களுக்கு மாத்திரம் குறைந்த விலையில் விற்கும்படி ஏற்பாடு செய்கின்றன. ஜர்மனி தேசத்தில் இம்மாதிரி சங்கங்கள் அநேகம் உண்டு. மெம்பர்கள் சாமான்வேண்டுமானால் தங்கள் சங்கத்தில் கிரயத்தை செலுத்தி டிக்கட்டுகள் வாங்கி ஒப்பந்தக் கடைகளுக்குப் போய் டிக்கட்டைக் கொடுத்து அதில் கண்டிருக்கும் கிரயத்துக்கு சாமான்களை வாங்குகிறார்கள். இவைகள் குறிப்பிட்ட காலங்களில் ஒப்பந்தக் கடைகளிலிருந்து டிக்கட்டுகளை திருப்பி வாங்கி கூடுதலான தொகையை தங்களுக்கு ஏற்பட்ட தரகைப் பிடித்துக்கொண்டு கொடுத்துவிடுகின்றன. இந்தத் தரகிலிருந்து சிப்பந்திச்செலவுகளை கழித்து மிகுதியை சாமான் வாங்கினவர்களுக்கு அவரவர்களுக்கு

கூடுதலான தொகைப் பிரகாரம் தாமாகவே போட்டு விதித்துக் கொள்ளுகிறார்கள். இம் முறையை அனுஷ்டிக்கும் சங்கங்களுக்கு "டிஸ்ட்ரிப்யூடிவ் சொஸைடி" (பிரிவினைச் சங்கம்) என்னும் பெயர் தகாது. ஏனென்றால், அவைகள் நேரில் சாமான்களை வாங்கி விற்கிறதில்லை.

இந்தியாவில் இச்சங்கங்கள்.—இந்தியாவில் இம்மாதிரிச் சங்கங்கள் அவ்வளவு பலிக்கவில்லை. சென்னைபட்டணத்தில் உள்ள திருவல்லிக்கேணி "அர்பன் கோஆபரேடிவ் சொஸைடி" மாத்திரம் சந்தேகத்துக்கு இடமன்னியில் வளர்ந்துப் போய்விட்டது. அது சென்னை ரெஜிஸ்தரார் சொல்லியபடி நிகரற்றது. அது சாமான்கள் விற்கிறதுடன் லேவாதேவியும் செய்து வருகிறது.

இது வரையில் பெரிய நகரங்களில் மாத்திரம் ஸ்டோர்கள் ஏற்பட்டிருக்கின்றன; இன்னும் கிராமாந்தரங்களில் அவைகள் ஏற்படவில்லை.

பழய ஆக்டு பிரகாரம் நாணயச் சங்கங்கள் தான் ரிஜிஸ்தரார் தானே ரிஜிஸ்டர் செய்யலாம். 1912-ஞுத்திய 2-ஆவது ஆக்டுப்படி பிரிவினைச் சங்கங்களையும் நாணயச் சங்கங்கள்போல் ரிஜிஸ்தர் செய்ய அதிகாரம் கிடைத்திருக்கிறது.

கருத்து.—பொதுவாய் செட்டு, சுயஉதவி, கூட்டுறவு, முதலிய நற்குணங்களை விருத்தி செய்வதுடன் இச் சங்கங்களின் முக்கியக் கருத்து என்னவென்றால் குடித்தனத்துக்கு வேண்டிய சாமான்களை மொத்தமாக வாங்கி பிரித்து கொடுப்பது தான். மெம்பர்களுடைய பொது நன்மைக்காக மொத்தமாகவும் சில்லரையாகவும் வியாபாரம் செய்வது இதன் எண்ணம்.

மெம்பர்களின் உத்தரவாதம்.—மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்கப் பட்டது. சங்கத்தை விட்டு விலகிய மெம்பருக்கு இரண்டு வருஷம் வரையில், விதிகளில் கண்ட அளவுக்கு உத்தரவாதம் உண்டு. மெம்பர் இறந்துபோகும் பக்ஷத்தில் அவருடைய வார்சை ஒருவருஷம் வரையில் கட்டுப் படுத்தும்.

முதல்.—மெம்பராகச் சேர எண்ணமுள்ளவர்கள் கூடித் தங்களுக்கு வருஷந்தோறும் எவ்வளவுக்கு சாமான்கள் வேண்டியிருக்கும் என்பதை சுமாராகக் கணக்கெடுத்துக் கொண்டு வருஷத்தில் முதல் தொகையை எத்தனை தடவை புரட்டிக் கொள்ளலாம் என்பதையும் கவனித்து வேண்டிய தொகையை தலைக்குக் கொஞ்சமாகக் கொடுப்பார்கள். வருஷத்தில் பாதிநாளுக்கு மேல் வியாபாரம் விரைவாக இராது. ஆகையால் அப்படிப்பட்ட சமயங்களுக்கு மாத்திரம் போதுமான அளவு தொகையை சேகரிப்பது தான் சரி. பணம் ஒரு சமயத்திலும் உபயோகமின்றி முடங்கி இருக்கக் கூடாது. வியாபாரம் விரைவாக நடக்கும்போது ஜாஸ்தித் தொகை வேண்டியிருந்தால் அச்சமயத்துக்கு மட்டும் வேண்டிய தொகையைக் கடனாக வாங்கிக் கொள்ளலாம்.

நிர்வாகம்.—நிர்வாகவேலையை இரண்டுபாகமாகப்பிரிக்கலாம்; மேல் விசாரணை செய்வது, வேலைசெய்வது என்பதும். சங்கத்தின் காரியங்கள் 5 க்குக் குறையாமல் 10-க்கு மேற்படாத நபர்கள் உள்ள நிர்வாக சபையால் நடத்தப்படுகிறது. இந்தச் சபையில், அக்கிராசனாதிபதி, காரியதரிசி, அல்லது இரண்டு பேர்களுமாவது இருப்பார்கள். திருவல்லிக்கேணி சங்கத்தில் காரிய தரிசிக்குச் சம்பளம் உண்டு. இவர்களைத் தவிர இந்த சபையில் வியவகார விஷயங்களைக் கவனிக்க ஒருவரை

யும், அல்லது உப அக்கிராசனாதிபதியாக ஒருவரையும் நியமிக்கலாம். ஆனால் இந்த சபையில் அநேகர் இருக்கக்கூடாது. இந்தச் சபையின் மெம்பர்களை சாதாரணமாய் மெம்பர்கள் கூடிப்பொறுக்கி யெடுக்கவேணும். ஆனால் சங்கம் மிகப் பெரிதாயிருந்தால் மெம்பர்கள் அனைவரும்கூடி பொறுக்கி யெடுப்பது சிரமமாயிருக்கும். ஆகையால், இவர்களைப் "பொறுக்கி யெடுக்கும் சபை" ஒன்று ஏற்படுத்துவது வழக்கம். சில சங்கங்களில் இதைத்தவிர ஆலோசனைச் சபை ஏற்படுத்துவதும் உண்டு.

நிர்வாக சபை கூடும்போது இந்தச் சபையோர் வந்திருப்பதும் யோசனை சொல்லுவதும் உண்டு. நிர்வாக சபையாருக்குள் யாராவது அக்கிரமம் செய்வதாகத் தோன்றினால் ஆலோசனை சபையோர் அந்த நிர்வாக சபையாரை விலக்கிவிட வேணுமென்று சங்கத்தின் மகா சபைக்கு சிபார்சு செய்யலாம்.

வேலை செய்வதற்காக ஒரு காரியதரிசியும் அல்லது மானேஜரும் கணக்குப் பிள்ளைகளும் கடைக்காரப் பையன்களும் நியமிக்கப் படுகிறார்கள். சிப்பந்திச் செலவு கூடியமட்டில் குறைவாக இருக்கவேண்டும். ஆனால் வேலையில் கெடுதியிருக்கக் கூடாது. கூடியமட்டில் சம்பளவேலைக்காரர்களும் தங்கள் வேலையைப் பெரிதாகக் கொண்டாடி அதில் ஆசை கொண்டு மனப்பூர்த்தியாய் உழைக்க வேண்டும்.

கணக்குகள்.—ஸ்டோர்களின் தினசரி கணக்குகளை வெகு ஜாக்கிரதையாய் வைப்பதும் தவிர அப்போதைக் கப்போது பரிசோதிக்கப்பட வேண்டும். மூன்று மாசத்திற்கு ஒரு தடவையாவது ஸ்டோரிலிருக்கும் சாமான்களை ஜாப்தா வெடுத்துப் பரிசோதனைசெய்ய நிர்வாக சபையார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

லாபத்தை வீதிப்பது—இந்தச் சங்கங்கள் மொத்தமாய் லாபமாக சரக்குகள் வாங்கி கடைவிலைப் பிரகாரம் விற்கின்றன. சிப்பந்திச் சம்பளம் முதலாகிய செலவுபோக மிகுதி லாபமாகும். சட்டத்தில் சொல்லிய பிரகாரம் லாபத்தில் நாலி லொன்றையாவது காப்பு தனமாக வைக்கவேண்டும். கூட்டுறவுக் காரியங்களில் நஷ்டம்வர இடமில்லாம லிருந்தாலும் காப்பு தனம் சேர்த்து வைத்திருந்தால் சங்கம் நீடித்திருப்பதற்கு ஆஸ்பதமாகும். மேலும் காப்பு தனமிருந்தால் சங்கம் விருத்தியாவதற்கும், மெம்பர்கள் ஜாஸ்தி பிரயோஜனத்தை அடைவதற்கும், இடமுண்டு. பிரிவினைச் சங்கங்களுக்கும் சாதாரண வியாபாரிகளுக்கும் போட்டி உண்டாகும். அப்பொழுது காப்பு தனம் பெரிய உபகாரமாயிருக்கும்.

நான்கி லொன்றையோ அல்லது ஜாஸ்தியாகவோ காப்பு தனத்துடன் சேர்த்தபிறகு மிகுதியிருப்பதை பின்வரும் முறையில் உபயோகப் படுத்தவேண்டும்:—(1) முதலுக்காக வட்டிகொடுப்பது, (2) மெம்பர்கள் வாங்கின சாமான்களின் கிரயப்பிரகாரம் லாபம் பிரித்துக் கொடுப்பது, (3) சங்கத்தின் மகா சபையாரால் தீர்மானிக்கப்படும் பொது நன்மைக்காக செலவு செய்வது. பொது நன்மை விஷயங்களில் மொத்த லாபத்தில் 100-க்கு 7½-யைக் காட்டிலும் ஜாஸ்தி செலவழிக்கக் கூடாதென்று புது ஆக்டின் 34-வது செக்ஷனால் ஏற்படுகிறது. சில சமயம் ஸ்டோரின் சிப்பந்திகளுக்கு அவர்களுடைய வேலையும் நடத்தையும் திருப்திகரமாயிருந்தால் இனாம் கொடுப்பது உண்டு. ஆனால், காப்பு தனத்துக்காகப்பணம் போட்டு முதலுக்காக வட்டியும் கொடுத்து பின்புஏதாவது மிச்சமிருந்தால்தான் இது கொடுக்கலாம்.

சங்கத்தை நடத்தும் முறைகள்.

1. மெம்பர்களுக்கு விற்பது:—மெம்பர் இல்லாதவர்களுக்கு விற்பது கூட்டுறவு முறைகளுக்கு விரோதமென்று எண்ணப்படும். மெம்பர்களுக்கு மாத்திரம் விற்பதுதான் கோவாபரேடிவ் முறைகளுக்கு ஒத்திருக்குமென்று இடாலிதேசத்து இரண்டாவது கோவாபரேடிவ் சங்கத்தில் தீர்மானம் செய்யப்பட்டது. இந்த தேசத்தில் மெம்பர்களுக்கு மாத்திரம் தான் ஸ்டோர்கள் விற்பனை செய்து வருகின்றன; ஆனால் சில ஸ்டோர்களில் மெம்பராக இல்லாவிட்டாலும் "அஸோஷியேட்ஸ்" என்பவர்கள் சிலர் சாமான்கள் வாங்கலாம். அவர்கள் மகாசபைகூடும்போது வோட்டுக்கொடுக்க லாயக்கில்லை. அவர்களுக்கு லாபத்தில் ஒரு சம்பந்தமும் கிடையாது. ஐரோப்பாவில் சில சங்கங்கள் மெம்பர் இல்லாதவர்களுக்குக்கூட சாமான்கள் விற்பதுடன் அவர்களுக்கு லாபத்திலும் கொஞ்சம் கொடுக்கின்றன.—ஆனால் மெம்பர்களாயிருந்தால் என்ன லாபம் கிடைக்குமோ அதில் 100 க்கு 60 தான் இவர்களுக்குக் கிடைக்கும். மெம்பர்களுக்குத்தான் விற்கவேண்டும் என்பதற்கு காரணங்களாவன;—(1) முதலை சேகரிப்பதில் சம்பந்தம் இல்லாதவர்களுக்கு சங்கத்தின் லாபங்களில் யாதொரு பாத்தியமுமில்லை;

(2) ஸ்டோரில் வாங்குவது, மெம்பராயில்லாதவர்களுக்கு என்ன சாமான், எத்தனை வேண்டியிருக்குமென்பது திட்டம் போடுவது கஷ்டமானதால் வியாபாரத்தில் மோசம் போவதற்கு இடமுண்டாகும்.

2. லாபநஷ்ட கவனிப்பு.—வியாபாரிகள் போலஸ்டோரும் லாபநஷ்டங்களைக் கவனித்துத் தொழில்முறையை அனுஷ்டிக்கவேண்டும். மனதுபோனபடி விடக்கூடாது.

3. ரொக்க வியாபாரம்:—"கடனுக்கு விற்பதைக் காட்டிலும் சங்கங்களுக்கு பெரிய அபாயம் வேறு ஒன்றுமில்லை" என்று டாக்டர் பிஜாமெஸியோ என்பவர் கூறியிருக்கிறார். ரொக்கத்துக்கு வியாபாரம் செய்வதில் கடன்முழுக இடம் இல்லை. இத்தோடு கணக்குவைப்பது எளிதாகும். கஷ்டமான வியவகாரங்கள் சம்பவிக்காது. சச்சேரியில் தாவா செய்ய இடமிருக்காது. வக்கீல்கள், அமீனாக்கள் முதலானவர்கள் விஷயமாய் செலவும் நேரிடாது. அத்தோடுகூட சங்கம் தான் வாங்குமிடத்தில் ரொக்கத்துக்கு வாங்கமுடியும். அதனாலே தன்னிஷ்டப்படி வாங்கலாம்.

4. கடைவிலைப் பிரகாரம் விற்பனை:—ஏற்கனவே சொன்னபிரகாரம் ஐரோப்பாவில் சில சங்கங்கள் எல்லா செலவும் கணக்குப்போட்டு என்ன ஆகிறதோ அந்த விலைக்கே விற்கின்றன. இம்மாதிரி செய்வதால் அநேகமாய் சாமான்கள் விலைகுறைவாய் கிடைக்கிறதைத் தவிர வேறு ஒருவிதமான லாபமும் மெம்பர்களுக்கு இல்லை. இப்படிக்குண்டாகும் லாபம் சுவல்பமாதலால் அப்போதைக்கப்போது தெரியாமலே செலவாகி விடுகிறது. ஆயினும் இந்த முறைக்கும், கடைவிலைப்பிரகாரம் விற்கிற முறைக்கும் உள்ள வித்தியாசத்தை விவரிப்பது அநாவசியம்; இவ்விஷயம் நன்கு ஆராய்ந்தவர்கள் பின் சொல்லியதுதான் உத்தமமென்று தீர்மானித்திருக்கின்றனர். கடைவிலைப்பிரகாரம் விற்று குறித்த காலங்களில் லாபத்தைப் பிரித்துக் கொடுப்பதால், அப்போதைக்கப்போது கிடைக்கும் லாபம் கொஞ்சமாக விருந்தாலும், நமக்குத் தெரியாமலே ஒரு பெரிய தொகையாய் சேர்ந்து விடுகிறது. தான் அறியாமலே பணம்சேரும். வேலை செய்து பிழைக்கும் ஜனங்களுக்கு செட்டாய் செலவுசெய்ய முடியாது, என்பதை சால்லவும் வேணுமா? ஏனென்றால்

ஒரு வித்வான் கூறியபிரகாரம், எவர்களிடத்தில் செட்டுக் கட்டும் மிகுதியாய் இருக்கவேண்டியது அதிக அவசியமோ அவர்களிடத்தில் தான் அவைகள் சுத்தமாய் இல்லாமல் இருக்கிறது. வாஸ்தவத்திலேயே இவர்களுக்கு "நாளைக்குக் கிடைக்கும் பெட்டைக் கோழியைவிட இன்றைக்குக் கிடைக்கும் முட்டைதான் பெரிது."

5. சம்பளமில்லாத நிர்வாகம்:—ஸ்டோர்களை நடத்துவதையும், மேல்விசாரணை செய்வதையும், கணக்குப் பரிசோதனை செய்வதையும், மெம்பர்களே சம்பளமில்லாமல் ஏற்றுக் கொள்ள வேண்டியது. இது கூட்டுறவுச் சங்கங்களுடைய கொள்கைகளில் முக்கியமானது.

சங்கங்கள் துணை சேரலும் கூடுதலும்:—ஸ்டோர்கள் தனித்தனியே இருப்பதால், அவைகளைக் கெடுக்க பல போட்டி வியாபாரிகள் ஏற்படுவார்கள். ஆகையால் ஸ்டோர்கள் எண்ணிக்கையில் ஜாஸ்தியானவுடன் தாங்கள் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய "ஹோல்ஸேல் சொஸையிடியை" (மொத்தப் பிரிவினைச் சங்கமாய்) ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; அதாவது, மொத்தமாக சாமான் வாங்கும்பொருட்டு ஸ்டோர்கள் சேர்ந்து கட்டுப்பட்டு ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்தச் சங்கத்தில் ரிஜிஸ்தரான மற்ற சங்கங்கள் தான் மெம்பர்களாக இருக்கலாம். அவைகளோடு தான் அதுவும் வியாபாரம் செய்யலாம். இம்மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டால் தான் ஸ்டோர்கள் நிலைபெறும்.

ஸ்டோர்கள் என்ன சாதித்திருக்கின்றன.—ஒரு நகரத்தில் பெரிய ஸ்டோர் நன்றாய் நடத்தப்பட்டால் பக்கங்களில் இருக்கும் உபயோகமில்லாத மோசம்செய்கிற கடைகள் மாறுகின்றன. இவைகளில் சாமான்கள் வாங்கும் கூலிவேலை

செய்து பிழைப்பவர்களுடைய நிலைமை சீர்படுகிறது. அவர்களுடைய கூலியும் ஜாஸ்திப்படுகிறது. அது ஒரு சிறந்த ஸேவிங்ஸ் பாங்காக (பணம் மிகுத்து வைக்கும் பாங்காக) சீக்கிரத்தில் ஆகிவிடுகிறது—அப்போதைக் கப்போது சாமான்கள் வாங்கும் பொழுதெல்லாம் லாபம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தானாகவே சேர்ந்துகொண்டு வருகிறது. சாமான்வாங்கும் ஒவ்வொரு தடவையிலும் கொஞ்சலாபம் ஒரு உண்டிக் கலயத்துக்குள் போடுவதுபோல் ஆகிறது; வருஷத்தின் முடிவில் இது பெரிய தொகையாகிறது. இந்த ஏற்பாட்டில் ஆச்சரியம் என்னவென்றால், ஒரு மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய்ச் சாப்பிடுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாய்ப் பணம்மிகுத்து விடுகிறான்போலும். இதைத் தவிர, ஒரு கோவாபரேடிவ் சங்கத்தில் மெம்பராக இருப்பதால் உண்டாகும் உள்ளத்தின் பரிபாகத்தைப்பற்றிப் பல விடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

9-ஆவது அத்தியாயம்.

—:●:—

உற்பத்திச் சங்கங்களும் மற்றவகைச் சங்கங்களும்.—கூட்டுறவுமுறையில் சாக்குகள் உற்பத்திசெய்ய முதல்முதல் ஆரம்பித்த பொழுது தொழிலாளிகள் "சுயநிர்வாக வேலைச் சாலைகள்" என்னும் சங்கங்களாய்க் கூடினர். இவைகளில் தொழிலாளிகள் தங்கள் முதல்களைக் கூட்டாய் வைத்துக்கொண்டு சேர்ந்து வேலை செய்தனர்.

இந்த ஏற்பாட்டில் சரக்குகள் உற்பத்தி செய்தலால் உண்டாகும் லாபத்தைத் தாங்களே அனுபவிக்கலாம். முத

லாளி என்று ஒருவனிருந்தால் அவன் அதைக் கேள்விகொள்ள மாட்டான். ஆனால் நஷ்டம் வந்தாலும் உட்படத்தான் வேண்டும். கால அளவில் இந்த ஏற்பாடு சற்று மாறிற்று; தொழிற்சாலையில் வேலை செய்யாதவர்களில் சிலரைக் கூடச் சேர்த்துக் கொண்டனர். இவர்கள் சங்கத்தின் நோக்கங்களை ஒப்புக்கொண்டவர்கள். "சுய நிர்வாகத் தொழிற்சாலை"களிலிருந்து உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உண்டாயின. முதலாளிகளையும் தொழிலாளிகளையும் ஒன்று சேர்த்து, சரக்கு உற்பத்தி செய்தலால் உண்டாகும் லாபத்தைச் சமமாய்ப் பகிர்ந்து கொள்ளும்படி செய்தல் இச்சங்களின் நோக்கம். இதனால் தொழிலாளிகளின் நிலைமை உயருகின்றது.

இவைகளின் விசேஷ குணங்கள்.—(1) இச்சங்கங்களில் வேலை செய்பவர்களுக்கு முதல் போடாவிட்டாலும் கூட லாபத்தில் ஒரு வீதம் கிடைக்கிறது; இதைத் தவிர கூலியும் கிடைக்கிறது. சம்பாதித்திருக்கும் கூலிக்குத் தக்கபடி ஒரு ஈவு கிடைக்கிறது.

(2) சங்கத்தில் சம்பளத்துக்கு வேலைசெய்யும் தொழிலாளிகளுக்கு மெம்பராய்ச் சேர பாத்தியம் உண்டு.

(3) தொழிலாளிகளுக்கு சங்க நிர்வாகத்தில் சம்பந்தமுண்டு.

அமைப்பு.—இம்மாதிரிச் சங்கங்கள் பொறுப்பு வரையறுக்கப் படாத முறையில் ரிஜிஸ்தர் செய்யப்படுகின்றன. சங்கங்களும் மெம்பராய்ச் சேரலாம். தனி நபர்களும் சேரலாம். மெம்பர்கள் ஒரு நிர்வாகசபையை நியமிக்கின்றனர்; இந்த நிர்வாகசபை ஒரு மானேஜரை (நிர்வாக உத்தியோகஸ்தரை) நியமிக்கிறது. வேலை செய்பவர்களில் சிலர் நிர்வாக சபையில்

சேர்க்கப்பட வேண்டுமென்றும் விதிகளில் ஏற்படுத்திக் கொள்ளுவதுண்டு.

வியவகார எல்லை.—உற்பத்திச் சங்கங்களில் வியவகார விஸ்தீரணம் கொஞ்சம் ஜாஸ்தியாகத்தான் இருக்க வேண்டும்; அங்கங்கள் மெம்பராய்ச்சேர்ந்தால் எல்லையே வைத்துக்கொள்ளுவது வழக்கமில்லை?

நோக்கம்.—ஒவ்வொரு சங்கமும் ஒருவகைத் தொழிலைச் செய்வதாய் ஏற்படுத்திக் கொள்ளுகிறது, உதாரணம்: நெசவு. சமீபத்தில் சென்னைக்கருகிலுள்ள மாம்பளம் என்னும் இடத்தில் ஏற்பட்டிருக்கும்சங்கம் எண்ணெய் உற்பத்திசெய்கிறது.

லாபத்தை வீதித்துக் கொள்ளுவது.—1912ஆம் II-வது ஆக்ட்பிரகாரம் இச்சங்கள் லாபத்தில் ஒரு பாகத்தை க்ஷேமநிதியில் சேர்க்கவேண்டும். பாக்கியுள்ளதைப் பின்வரும் முறையில் உபயோகப்படுத்த வேண்டும்:—

(1) பங்குத்தொகைக்கு வட்டி: (2) தொழிலாளிகளுக்கு ஈவு: சில வேளையில் இதை "இனாம்" (bonus) என்று சொல்லுவதும் உண்டு: அந்தப்பெயர் கொடுப்பதில் ஆக்ஷேபணைக்கு இடம் ஏற்படுகிறது: ஏனென்றால் "இனாம்" என்பதில் யாரோ மேலான பதவியில் உள்ளவன் கீழான பதவியில் உள்ளவனுக்கு கொடுப்பது என்னும் அபிப்பிராயம் அடங்கி இருக்கிறது; கூட்டுறவுச் சங்கத்திலோ எல்லோரும் சமமாகவே பாவிக்கப்பட வேண்டும்: (3) மெம்பர்களுக்கும், சங்கம் உற்பத்திசெய்யும் சரக்குகளை வாங்குபவர்களுக்கும் ஒரு ஈவு: (4) நிர்வாக சபையோருக்கு ஒரு சுவல்ப வெகுமானம்: (5) ஐரோப்பாவிலுள்ள சங்கங்களில் நூதன ஏற்பாடு ஏதாவது கண்டு பிடிப்பவர்களுக்கும், விசேஷ வேலை சங்கத்திற்காகச் செய்பவர்களுக்கும் இனாம் கொடுப்பதும் உண்டு.

அவைகளின் அபிவிருத்தி.—உற்பத்திச் சங்கங்களுக்கும்
பெரிய முதலாளிகளுடன் போட்டி போடமுடியவில்லை. அவர்
களுக்குத் தொழில் செய்வதில் அனுபவம் மிகுதியாயிருக்கி
றது; தங்களுக்கே சொந்தம் என்பதால் வேலையில் கவலையும்
ஊக்கமும் மிகுதியாய் இருக்கிறது; ஆகையால் சாக்குகள்
குறைந்த செலவில் உற்பத்திசெய்ய சாத்தியப்படுகிறது. சங்
கங்களிலோ கண்டிப்புடன் தொழில்நடக்க சாத்தியமில்லை—
ஏனென்றால், ஒவ்வொருவருக்கும் சங்கத்தில் சொந்தமிருப்ப
தால் தந்தலை நாட்டாமைக்கு இடமுண்டாகும். வேண்டும்
போது ஜாஸ்தி முதல் கிடைப்பதுமில்லை. சங்கங்களில் பெரிய
சம்பளம் கொடுக்க முடியாததால், தொழிலில் தேர்ச்சியடை
ந்தவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள முடியாது. இந்த
இடையூறுகளால் எந்த இடத்திலேயும் உற்பத்திச் சங்கங்கள்
மற்றச் சங்கங்களைப்போல அவ்வளவு மிகுதியாக உண்டாக
வில்லை. ஆனாலும், அச்சங்கங்கள் இவ்வளவு நல்ல நிலைமைக்கு
வந்ததே பெரிது. இதிலிருந்து, பொறுத்து வேலைசெய்தால்
இச்சங்கங்களும் விருத்திக்குவர இடமிருக்கிறது என்று
தோன்றுகிறது. பிரான்ஸ் தேசத்தில் இச்சங்கங்கள் விருத்
திக்கு வந்திருக்கின்றன. இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற சில
சங்கங்களும் கூடியவரையில் க்ஷேமமாக விருக்கின்றன. முன்
னுக்கு வரும்போலும் தோன்றுகிறது.

வேறுவகைச் சங்கங்கள்:—இதுவரையில் சொன்னவகை
களைத்தவிர வேறு வியவகாரங்களிலும் கூட்டுறவு முறை
கள் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன. விசேஷ விஷ
யமாக அனுஷ்டிக்கப்பட்டு விசேஷித்த பயனைத் தந்திருக்
கின்றன; இன்னும் பரவுமென்பதில் தடையில்லை. ஆனால்
இந்த தேசத்தில் இதுசம்பந்தமாக இன்னும் ஒன்றும் நடக்க
வில்லை, மற்ற தேசங்களில் ஏற்கனவே சொல்லப்பட்டவகை

களைத்தவிர வேறு பலவகைச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவையாவன:—

(1) மெம்பர்களுக்கு வேண்டிய எரு, விதை, கருவிகள் முதலான வியவசாய சாதனங்களை மொத்தமாக வாங்கி மெம்பர்களுக்கு விற்கும் சங்கங்கள்.

2. வியவசாய யந்திரங்களை மெம்பர்களின் உபயோகத்திற்காகப் பொதுவில் வாங்கி வைத்திருக்கும் சங்கங்கள்.

3. பால், வெண்ணெய், பாலடைக்கட்டி முதலியவைகளை உண்டுபண்ணவும், கோழி, வாத்து முதலிய பிராணிகளை வளர்க்கவும் ஏற்பட்டிருக்கும் சங்கங்கள்.

4. வீடு கட்ட உதவும் சங்கங்கள். இவைகள் வேலை செய்யும் வழிகளாவன

(a) வீடு வாங்குவதற்கும் கட்டுவதற்கும் கடன் கொடுத்துப் பல வருஷ அளவில் தவணையாய் வாங்கிக் கொள்ளுவது.

(b) சங்கமே வீட்டைக் கட்டி மெம்பர்களுக்கு வாடகைக்கு விடுவது.

(c) வீடு கட்டியோ அல்லது விலைக்கு வாங்கியோ மெம்பர்களுக்கு கொடுத்து விட்டு, மாதா மாதம், இந்தப் பணத்தின் வட்டியையும் முதலில் ஒரு சுவல்ப பாகத்தையும் வாங்கிக் கொள்ளுவது

5. பலவகை இன்ஷ்யூரன்ஸ் (insurance) சங்கங்கள்.

10-ஆவது அத்தியாயம்.

ஆங்கிலேயர் இந்த தேசத்திற்கு வருவதற்கு வெகுகாலம் முன்பேயே இங்கு பரஸ்பர உபகாரத்திற்காக ஜனங்கள் கூடுவது வழக்கம் உண்டு. இந்தியக் கிராமங்களே இதற்கு உதாரணம். இது கூட்டுறவுதான். ஆனால் இக்கூட்டங்களில் ஒருவன் ஒரு ஊரில் பிறந்தால் அதனாலேயே சேருவான். தானாய் யோசித்து வேண்டுமென்று சங்கமாய்ச் சேருவது என்பது முன்னாட்களில் ஏலாது. இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கம் இந்தியாவில் ஏற்பட்டு 10 வருஷங்கள்கூட ஆக இல்லை. பல ராஜதானிகளிலுள்ள ரிஜிஸ்ட்ரார்கள் வருஷாந்திர ரிபோர்டிலிருந்து கூட்டுறவால் அதிக நன்மை ஏற்பட்டிருக்கிறது என்று விளங்கும். அநேக கிராமவாசிகளுடைய ஜீவனை மேன்மைப்படுத்தி, நன்னெறியில் அவரைச் செலுத்தியிருக்கிறது. ராஜாங்க விஷயங்களில் மேலுக்குமேல் கலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் ஜனங்களுக்கு, கற்பிக்கிறது, என்பது ஆனரபில் பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்களுடைய அபிப்பிராயம்.

இதுவரையில் கூட்டுறவு இந்த தேசத்தில் பிரபலித்தது கவர்ன்மெண்டாருடைய பிரயத்தனத்தால்தான். சங்கங்கள் வியாபிப்பதற்கு ஜனங்களுடைய நம்பிக்கை அத்யாவசியம். சர்க்கார் தங்கள் அனுபோகமுடைய உத்தியோகஸ்தரைக் கொண்டு சங்கங்களின் துர்ச்செயல்களைத் தடுத்து, நல்வழியில் நடத்துவார்கள், என்று ஜனங்கள் உணருவதால்தான் இப்படிப்பட்ட நம்பிக்கை ஏற்படுகிறது. ஆனால் கவர்ன்மெண்டார் எப்போதும் இந்தமாதிரி உதவுவார்களென்று எதிர் பார்க்கக்கூடாது. ஜனங்களுக்குத் தாங்களே நிர்வகிக்கும்

சக்தி ஏற்பட்ட உடன் தாங்கள் விலகிவிட வேண்டுமென்பது சர்க்காருடைய எண்ணம். ஆனால் அன்புடைய தாய் தன்மக்கள் காலூன்றி நடப்பதைக் கவலையுடன் கவனிப்பதுபோல் தாங்கள், பரிவுடன் ஏற்படுத்திய சங்கங்கள் வியாபித்தலை எப்போதும் கவலையுடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

சர்க்கார் தாங்கள் செய்யவேண்டியதை செய்துவிட்டார்கள்; ஜனங்கள் செய்யவேண்டியதுதான் பாக்கி. ஜனங்களுக்குள் நட்பையும், அன்பையும் விருத்திசெய்யும் கூட்டுறவு முறையைப் பரவச் செய்தலும், அதன் கொள்கைகளை போதிப்பதும் ஜனங்கள் வேலைதான். அவர்களே சங்கங்களை அமைத்துச் சரிவர வேலைசெய்ய வேண்டும். ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூட்டுறவைப்பற்றி பிரசங்கம் செய்வது தங்கள் வேலையாய் வைத்துக்கொண்டிருக்கின்றனர். கூட்டுறவே ஒரு புதிய மதமாகி விட்டது. அதில்ஊக்கமுடையவர் பலர் உண்டு; புது மதத்தில் உண்டாகும் ஊக்கத்துடன் உழைக்கின்றனர். இந்தக் கொள்கையைப்பரவச்செய்ய, உபந்நியாசங்களும், மஹாநாடு கூடலும், வைபவமாய் திருவிழாக்களும், நடக்கின்றன. இந்த தேசத்திலும் கூட்டுறவு நிலைபெற வேண்டுமானால் பிரமுகர்கள் அதைப்பற்றி முயற்சி செய்யவேண்டும். செய்யவேண்டிய வேலை அதிகமாய் இருக்கிறது. வேலை செய்பவர்களோ சிலர்கள் தான் இருக்கின்றனர். இந்த தேசத்திலுள்ள கல்விமான்களுக்கு திவான் பகதூர் ஆர். இராமச்சந்திரராவ் அவர்கள் சொல்லிய உருக்கமான வார்த்தைகளுடன் நாம் இந்த அத்தியாயத்தை முடிக்கலாம்: "உங்கள் கல்விச் செல்வத்தை தேசத்தவர் நன்மைக்காக நம்புதலாய் உங்களிடம் வைக்கப்பட்ட பொருளாய் பாவிக்கவேண்டும். ஜீவனத்துக்கு உழைப்பதில் இடைவேளை இல்லாது எவ்வளவோ பேர்கள் வாழ்நாள் கழிக்கின்றனர். அவர்கள் துன்பத்தை

நிவர்த்திசெய்ய மாதம் 3 மணி நேரம் சுயநயத்தை நீக்கி பிறருக்கு உபகாரம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் உடன் பிறந்தவருக்கு உதவி, நன்மை உண்டுபண்ணினேம் என்னும் மன அமைதி பெறுவீர்."

அநுபந்தம்.

ஒரு ஐக்கியநாணயச் சங்கத்தை ஏற்படுத்தும் வழி:—

(அ) நகரங்களில்.—சிலர் பிரவர்த்தித்து, ஜனங்களைக் கூட்டி சங்கம் ஒன்று ஏற்படுத்தலாமா என்று ஆலோசிக்கிறார்கள். கூடியிருக்கும் ஜனங்கள் ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொள்ள விரும்பினால், உப விதிகளை ஏற்படுத்த தலைமைப்பொறுக்கி எடுத்து நியமிக்கிறார்கள். வழக்கமாய் கோஆபரேடிவ் ரிஜிஸ்தாருடனாவது அவருடைய கீழ் உத்தியோகஸ்தர் ஒருவருடனாவது ஆலோசனை செய்து உபவிதிகள் ஏற்படுத்தப் படுகின்றன. சங்கத்தில் சேர வேண்டுமென்ற விருப்பமுள்ளவர்கள் மறுபடியும் கூடி, உபவிதிகளை ஆமோதித்து, சர்க்காரால் அனுப்பப்படும் "பாரத்தில்" கையொப்பம் போடுகிறார்கள். சங்கம் ரிஜிஸ்தர் ஆனவுடன் சந்தாவை வசூலித்து மெம்பர்களைச் சேர்த்துக் கொள்ளவும், அப்போதைக்கு மட்டும் வேலை செய்யவும் ஒரு நிர்வாக சபையையும் காரியதரிசியையும் நியமிக்கிறார்கள். அந்த காரியதரிசி ரிஜிஸ்தர் விண்ணப்பத்தையும் உபவிதிகளையும் ரிஜிஸ்தாருக்கு அனுப்புவார். ரிஜிஸ்தாருக்கு ஆட்சேபனை யொன்றுமில்லை யென்று தோன்றினால், சங்கத்தையும் உபவிதிகளையும் ரிஜிஸ்தர் செய்து, அதைத் தெரிவிக்கும்படி ஒரு ஸர்டிபிகேட்டை அனுப்புவார். விண்ணப்பத்தில் கையொப்பம் போட்டவர்களும், பிறகு சேர்க்கப் பட்டிருக்கும் பேர்களும் உள்ள சந்தாவைச் செலு

த்திலேயுடன் மெம்பர்களாகிறார்கள். வழக்கமாய் ஒரு கோவாப்பரேடிவ் உத்தியோகஸ்தர் முன்பு மெம்பர்கள் கூடி வேலை துவக்குவார்கள். உடனே காயமாய் ஒரு நிர்வாக சபையைத் • தெரிந்தெடுக்கிறார்கள்.

(b) கிராமங்களில்.—சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று தோணுகிற இடங்களில், பிரவர்த்தகர்களாவது அல்லது கோவாபரேடிவ் உத்தியோகஸ்தரில் ஒருவராவது, கிராம ஜனங்களைக் கூட்டிவைத்து கூட்டுறவு முறைகளைப்பற்றி தெளிவாய் பேசுகிறார்கள். அதிலும், பொறுப்பு வரையறுக்கப்படவில்லை என்பதைப்பற்றியும், அதனுடைய அபாயங்களைப்பற்றியும் விசேஷித்து விளக்கமாகச் சொல்லப்படும். அங்குகூடியிருப்பவர்கள் நன்றாய் ஆலோசித்துப்பார்த்த பிறகு, அவர்களுக்கு இஷ்டமிருந்தால், தகுதியான உபவிதிகளை விவரித்துச் சொல்லப்படும். மெம்பராகச் சேர விருப்பமுள்ளவர்கள் உபவிதிகளுக்குக் கையொப்பம்போட்டு விண்ணப்பத்தை ஏற்பட்டிருக்கிற பாரத்தில் அனுப்புகிறார்கள் அதில் பின்வரும் விஷயங்களுக்கு ஜவாப்பு கொடுக்கப்படவேண்டும்—(1) சங்கத்தில் சேர விரும்புகிறவர்களுடைய பெயர்கள், (2) ஒவ்வொரு மெம்பருடைய சொத்து விபரம்—அசையும் பொருள், அசையாப்பொருள், இரண்டும், (3) கொடுக்கவேண்டிய கடன்களின் விபரம், (4) பாக்கி சொத்தினுடைய பெறுமானம், (5) அதில் எத்தனை பாகம் விண்ணப்பக்காரனுக்குச் சொந்தம், (6) அவனுக்கு வேண்டியகடன். இதன்பேரில் ரிஜிஸ்தரார் தீர்மானம் செய்வார்.

ஆரம்பத்தில் கேவலம் 10—பேர்கள் மட்டும் இருந்தால் போதாது—ஏனென்றால், வேலை செய்ய ஆரம்பிக்கும்போது யாராயினும் சிலர் விலகி விடலாம். அப்போது சட்டப்படி

வேண்டிய 10-நபருக்குக் குறையும். சேர்ந்தவர்களின் சொத்தை முழுதிலும் சேர்த்து எட்டில் ஒரு பாகத்தைவிடக் கடன் தொகையாகக் கூடாது. ஆயினும் மெம்பரால் சங்கத்தில் வாங்கப்படும் கடன், முன் கடன்களை அற தீர்க்கப் போதுமானதாக விருக்கவேண்டும். சங்கத்தை ரிஜிஸ்தர் செய்தவுடன், வேலை செய்யும் வழியைக் கற்பிப்பதற்காக, வேலையில் தேர்ச்சியடைந்த ஒரு உத்தியோகஸ்தரை ரிஜிஸ்தரார் அனுப்புகிறார். உடனே வேண்டிய கடன் தொகையை நிர்ணயித்து, ரிஜிஸ்தராருக்கு பஞ்சாயத்தார்கள் எழுதி யனுப்புகிறார்கள். அவர் ஒரு ஸெண்டரல் பாங்குக்கு சிபார்சு செய்கிறார். கிடைக்குமானால், சங்கம் உள்ளூரிலேயே கடன் வாங்கலாம்.

நாணயச் சங்கத்தின் நிர்வாகம்.—சங்க நிர்வாகத்தில் பஞ்சாயத்தார்கள் மட்டும் அல்ல; ஒவ்வொரு மெம்பரும் கவலையெடுத்துக் கொள்ளவேண்டும்.

பஞ்சாயத்தார்களின் முக்கியக் கடமைகளாவன:—

(1) மாதத்துக்கு ஒரு தடவையாவது கூடவேண்டியது.

(2) பஞ்சாயத்தார் எல்லாரும்கூடி, வெளிப்படையாய் காரியங்களை நடத்தவேண்டும்.

(3) வரவேண்டிய பணங்களை காலப்படி வசூல் செய்ய வேண்டியது,

(4) மெம்பர்களைத் தேடிக்கொடுத்து, பணம்சேர்த்து சங்கத்தில் டிபாசிட்டு செய்யும்படி தூண்டுதல் செய்து, ஒவ்வொருவரையும் சங்கத்தில் கவலையெடுத்துக் கொள்ளும்படி செய்யவேண்டும்.

ஒவ்வொரு பஞ்சாயத்து மெம்பரும் செய்யவேண்டுவனவாவன:—

(1) கடன் கொடுக்கப்படும் தொகையையும், எதற்காகக் கடன் கொடுக்கப்படுகிறது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

(2) எந்த உபயோகத்திற்காகக் கடன் கொடுக்கப்படுகிறதோ அதற்கே அது உபயோகப் படுத்தப் படுகிறதா என்று கவனிக்க வேண்டும்.

(3) சங்கத்தில் கடன்படும் மெம்பர்களுடையவும் அவர்களுக்கு ஜாமீனாயிருப்பவர்களுடையவும் சொத்தையும், கடனுக்கு அது ஈடாகுமா என்பதையும் விசாரித்துக்கொண்டிருக்கவேண்டும்.

(4) பஞ்சாயத்துக் கூடும்போது தவறாமல் ஹாஜராகவேண்டும்.

(5) கணக்குப் பரிசோதனை செய்ய நியமிக்கப்பட்டவராவது, அல்லது ஒரு பஞ்சாயத்து மெம்பராவது மாதம் ஒருமுறையாவது கணக்குப் பரிசோதனை செய்யவேண்டும்.

ஒவ்வொரு மெம்பரும் செய்யவேண்டியதாவது:—

(1) ஒழுங்காய்க் கெடுப்படி வட்டியும் முதலும் செலுத்த வேண்டும்.

(2) சாத்தியமானபோது பாங்கில் பணம் போடவேண்டும்.

(3) பஞ்சாயத்தார் கூடும்போது அடிக்கடி போயிருந்து சங்கத்தில் நடக்கும் விஷயத்தையெல்லாம் கவனிக்க வேண்டும்.

(4) பஞ்சாயத்தார் வேலை சரிவரப் பார்க்கிறார்களா என்று கவனிப்பது; வேலை ஒழுங்காய்ப் பார்க்காவிட்டால் தள்ளிவிட வேண்டும்.

(5) வருஷாந்திர மகாசபை கூட்டிக்கின்போது அபபா மல ஆஜராவது அவசியம்.

(6) மற்றப்படி, சங்க வியவகாரங்களில் நேரடியக் கவலை எடுப்பது.

சங்கங்களில் வைக்கவேண்டிய தஸ்தாவேஜுகள்.

I. மினிட் புஸ்தகம்:—சங்கங்களில் இப் புஸ்தகத்தில் எழுதவேண்டுவன வாவன:—(1) சங்கம் வேண்டுமென்று எழுதியிருந்த மனுவின் நகல்; மனுதாரர்களின் பெயர் (2) ரிஜிஸ்தராரவர்கள் ஒப்புக்கொண்ட பிரமாண உபவிதிகள் (3) ரிஜிஸ்தர் செய்த சர்ட்டிபிகேட் (4) மகாசபையோரின் தீர்மானங்களும், நிர்வாக சபையோரின் தீர்மானங்களும் (5) தீர்மானம் செய்யும்போது ஆஜராய் இருந்தவர்கள் பெயரும் எழுதப்பட வேண்டும்.

II. அட்மிஷன் புஸ்தகம்: (மெம்பராய்ச் சேர்க்கப்பட்ட கணக்கு):—கிராமச் சங்கங்களில் மெம்பர்களின் பெயரும் அவர்கள் பங்குகள் எவ்வளவு என்றும் எழுதப்படவேண்டும். நகரச் சங்கங்கள் இதற்கு பதிலாய் இரண்டு புஸ்தகங்கள் வைக்கின்றன; (1) பங்கு வீதக்கணக்கு (2) பங்கு ஜாப்தா.

III. கியாஷ் புஸ்தகம்: (வரவு செலவுக் கணக்கு)—நகரச் சங்கங்கள் இதற்கு பதிலாய், இரண்டு புஸ்தகங்கள் வைக்கின்றன, (1) வரவு செலவுக் கணக்கு (2) தினசரிக் கணக்கு.

IV. ரசது புஸதகம்:—இதனுடன் செல்லான் புஸ்தக மொன்றும் நகரச் சங்கங்கள் வைக்கின்றன.

V. கடன் பட்வாடா கணக்கு:—கடன் தொகை, கெடு, கடன் காரணம், ஜாமீன், இவைகளைப் புஸ்தகத்தில் பதியப்படும்.

VI. சங்கம் கடன்வாங்கும் கணக்கு:—நகரச் சங்கங்களில் டிபாசிட்டுப் புஸ்தகங்கள் வேறாக வைப்பதுண்டு.

VII. நடுதாசிகளின் பயில்.

VIII. ரசீதுகள் ஒட்டிவைக்கும் பயில்.

IX. ஆடிட் உத்திரவு புஸ்தகம்.

X. பங்குமனு புஸ்தகம்.

XI. கடன் மனுப் புஸ்தகம்.

XII. சொத்து ஜாப்தா.

XIII. லெட்டர்களின் காபி.